


# வார்த்தை புதுப்பிக்கிறது

2022 தவக்கால சிந்தனைகள் கையேடு | மூன்றாம் ஆண்டு

Jesus 4 everyone

# அனைவருக்கும் இயேசு

**சிங்கப்பூர் கத்தோலிக்க உயர்மறைமாவட்டத்தின் புதிய மறைபரப்பு முழக்க வரி**




| | |
|---|---|
| 1 | *Jesus is depicted by the figure "J"* |
| 2 | *In Jesus we say "Yes"* |
| 3 | *It is "us" who encounter Jesus* |
| 4 | *The colour tone in the word "Jesus" shows a movement from lukewarm (yellow/orange) depicted by "us" to passionate (red) depicted by "Yes"* |
| 5 | *The yellow tone on the 3 strips moving into the red tone shows another movement from lukewarmness to passion after encountering Jesus* |
| 6 | *The 3 strips signify that by our baptism, we are called to be priest, prophet, and king. We share in the 3-fold mission of Jesus Christ.* |
| 7 | *"4" represents the four Tenets of the New Evangelisation: Word, Worship, Communion and Witness.* |

# உங்கள் கருத்து மதிப்புமிக்கது

நீங்கள் இந்தக் கையேட்டை எடுத்ததற்காக முதலில் எங்கள் மனமார்ந்த நன்றி! இதன் பக்கங்களில் நீங்கள் மூழ்கும் போது, உங்களின் சிந்தனையைத் தூண்டியது எது என்பதையும், இதில் எப்பகுதியை நாங்கள் இன்னும் சிறப்பாக மேம்படுத்தப்படலாம் என்பதைப் பற்றியும் நாங்கள் அறிய விரும்புகிறோம். உங்கள் மதிப்புமிக்கக் கருத்துகளை எங்களுக்கு அளித்து, உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப் படுத்துங்கள். கீழே உள்ளக் குறியீடு மூலமாகவோ அல்லது எங்களது இணையப் பக்கம் மூலமாகவோ நீங்கள் கருத்தளிக்கலாம். நன்றி.

Scan me

**one.org.sg/feedback**

# பொருளடக்கம்

6 தவக்காலச் செய்தி 2022

7 இந்தக் கையேட்டின் நோக்கம்

7 இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

8 குழு அமர்வின் வடிவம்

9 குழுச் சிந்தனைகளை வழிநடத்துதல்

11 தவக்காலத்தின் ஞாயிறுகள் (மூன்றாம் ஆண்டு)

12 தவக்காலத்தின் முதல் ஞாயிறு

19 தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

26 தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

34 தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

41 தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

49 திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

58 பிற்சேர்க்கை ~ நடவடிக்கைகள்

76 நன்றியறிவிப்புகள்

# தவக்காலச் செய்தி 2022



கிறிஸ்துவில் பிரியமான சகோதரர் சகோதரிகளே,

ஒரு சிறியத் தொற்றுக்கிருமியால் தலைகீழான உலகத்தை நாம் அனைவரும் அனுபவித்திருக்கிறோம். நமக்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதும் மீண்டும் கடுமையாக்கப்படுதும் இன்று சகஜமாகிவிட்டது. ஓரளவிற்கு இதுவே நம் வாழ்வின் சுருக்கம். ஒரு நாள் நாம் இறை உறவில் வளர்கிறோம், மறுநாள் நாம் மீண்டும் அதேப் பாவச்சகதியில் கிடக்கிறோம். ஒரு நாள் நாம் அலைகள் மீது சவாரி செய்கிறோம், மறுநாள் அதே அலையில் மூழ்குகிறோம். பெற்ற வெற்றி தோல்வியாக மாறுகிறது. பாவங்களை விட்டொழிப்பதற்கான நமது முயற்சிகளை எதிர்க்கும் பாவச் சோதனைகளுடன் நாம் போராடும் போது கிடைத்த, சுதந்திரமும் பறிபோகிறது.

தவக்காலம் மீண்டும் ஒருமுறை ஆறுதலுக்கான நேரத்தை நமக்கு வழங்குகிறது. புயல்களும் கடந்து செல்லும் என்பதை இது நினைவூட்டுகிறது. அதற்காக, இது நமக்கு விண்ணக வாயிலுக்கானத் திறவுகோலை அளித்துவிட்டது என நினைக்கக் கூடாது. எப்போதும் மாறிக் கொண்டிருக்கும் நமது தீர்மானங்களைப் பாராது, நாம் எடுத்த முடிவுகளை அலட்சியப்படுத்தாது, நமது இறைவனின் நிலையான அழைப்பின் மீதும், நம் மீது அவர் கொண்ட என்றும் மாறாத அன்பின் மீதும் நாம் கவனம் செலுத்த இத்தவக்காலம் நம்மை அழைக்கிறது.

இறைவார்த்தை வழியாக இறைவன் நமக்கு என்ன வழங்குகிறார் என்பதையும், அதிலிருந்து நாம் பெறும் வல்லமைகள் மீதும் இத்தவக்காலத்தில் நாம் கவனம் செலுத்துவோம். உங்கள் உலகமும் போராட்டங்களும் இறைவார்த்தையால் புதுப்பிக்கப்படட்டும். இத்தவக்காலத்தில் நீங்கள் பயணிக்கும் போது, உங்களால் முடிந்தவரை வேறொருவருடன் இணைந்து பயணிக்க முயற்சி செய்யுங்கள். இதை இன்னும் சிறப்பாக்க சமூகத்துடன் பயணியுங்கள். இயேசு இந்த உலகத்திற்கு தனியாக வரவில்லை, அவர் தனியாக நடக்கவுமில்லை. இயேசு நீங்கள் யாராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியே நீங்களும் இருக்க இறைவார்த்தை உங்களை உருமாற்றட்டும்.

இத்தவக்காலத்தை நீங்கள் வீரியத்துடனும் விடாமுயற்சியுடனும் தொடங்கும் போது இறைவன் உங்களை அவரது அருளால் நிரப்புவாராக. இறை ஆசீர்.

**அருட்தந்தை டெரன்ஸ் பெரெய்ரா**
புதிய நற்செய்தி முழக்கத்திற்கான முதன்மை குரு

## இந்தக் கையேட்டின் நோக்கம்

இக்கையேடு குடும்பங்களுக்காகவும், பெரியோர் மறைகல்விக் குழுக்களுக்காகவும், ஆலயப் பணிக்குழுக்களுக்காகவும், அன்பியச் சமூகங்களுக்காகவும் தயார் செய்யப்பட்டது. இதைத் தனி மனிதச் சிந்தனைகளுக்கும் பயன்படுத்தலாம்.

- நாம் வாழும் கிறிஸ்தவ சமூகத்தை, இறைவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் இடமாக மாற்றவும்,
- இதில் பங்கேற்போர், அண்டை வீட்டாருக்கும் தேவை உள்ளோருக்கும் உதவும் தங்களின் குறிக்கோளை அடையவும், சமூக அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும்,
- பங்கிலுள்ள அமைப்புகளும் குழுக்களும் கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொண்டு, ஒன்று கூடி செபிக்கவும்,
- இதில் உள்ளச் சிந்தனைகள், செய்திகள், செயல்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் ஒருவரோடு ஒருவர் விசுவாசத்தைப் பகிர்ந்து, ஒப்புரவாக்கப்பட்டு, அன்பை மட்டுமே தங்கள் தகவல் பரிமாற்றத்தின் முக்கியச் செய்தியாக்கிக் குடும்பத்தினரிடையே உள்ள தொடர்பை அதிகரிக்கவும் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

## இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

திருப்பலியில் இறைவார்த்தையைப் பெறுவதற்கான முன்தயாரிப்பாக ஞாயிறு திருப்பலிக்கு முன்னரோ, அல்லது திருப்பலியில் நாம் கேட்ட இறைவார்த்தைகளை நம் வாழ்க்கையில் பின்பற்றும் வகையில் ஞாயிறு திருப்பலிக்குப் பின்னரோ இதைப் பயன்படுத்தலாம்.

குழு அமர்வின் போது இறைவார்த்தையைப் படிக்கவும், அமர்வை வழிநடத்தவும், கையாளவும் அமர்வின் உறுப்பினர்கள் தாராளமாக முன்வரலாம்.

ஒவ்வொரு அமர்வையும் சிறப்புடன் வழிநடத்த வெவ்வேறு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்கலாம். வேறொருவர் அமர்வில் நடைபெறும் செயல்களைக் குறிப்பெடுத்து, வர இயலாதவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒவ்வொரு அமர்வும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளவும். அடுத்த அமர்விற்கான இடமும் நேரமும் இந்த அமர்வில் அறிவிக்கப்பட வேண்டும்.

# குழு அமர்வின் வடிவம்

## தொடக்கச் செபம்:
எல்லோரும் ஒன்று சேர்ந்து தொடக்கச் செபத்தைச் சொல்லி, தொடக்கப் பாடலைப் பாடலாம். தியான உணர்வையும், இறைவார்த்தையைச் செவிமடுக்கத் தூண்டும் பாடல்களைப் பயன்படுத்தவும்.

## இறைவார்த்தை:
கொடுக்கப்பட்டுள்ள மூன்று இறைவார்த்தைப் பகுதிகளை இரு முறையாவது வாசித்து, சில மணித்துளிகள் மௌனமாக தியானிக்கவும். பின்னர், இந்தக் கையேட்டில் உள்ளவற்றைப் பயன்படுத்தி அமர்வின் முதல்வர் அப்பகுதிகளுக்கு விளக்கம் தர வேண்டும். அமர்வின் முதல்வர் முன்னதாகவே தகுந்த தயாரிப்புடன் இருத்தல் அவசியம்.

## தியானிப்போம்:
இந்த வார இறைவார்த்தைப் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளவும், நமது சிந்தனையை ஆழப்படுத்தவும் உதவும் இப்பகுதியை ஒருவர் வாசித்தப் பின்னர் சிறிது நேரம் தியானிக்கவும்.

## சிந்திப்போம்:
வெவ்வேறு குழுக்களை நினைவில் கொண்டு இப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்குகந்தப் பகுதியை எடுத்து வாசித்து, சிந்தித்துக் கருத்தளிக்கவும். பலரும் கருத்தளிக்க நேரம் ஒதுக்கவும். ஒரே நபர் பேசுவதைத் தவிர்க்கவும்.

## நம் வாழ்விற்காக:
இறைவார்த்தையின் அழைப்பை ஏற்றுக் குழுவாகவோ தனி நபராகவோ ஒரு திடமான செயலில் ஈடுபட உங்களுக்கான இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## நற்செயல் புரிவோம்:
நம்பிக்கையில் தளர்வுற்றிருக்கும் கத்தோலிக்கர்களுக்கும், புதிதாகத் திருமுழுக்கு பெற்றவர்களுக்கும் திருமுழுக்கு பெறாதவர்களுக்கும் இயேசுவின் நற்செய்தியையும், நம் நம்பிக்கையையும் பரப்பும் முயற்சிகளைச் சிறப்புடன் மேற்கொள்ளலாம்.

## நிறைவு செபம்:
எல்லோரும் இணைந்து, நிறைவு செபத்தைச் சொல்லி இந்த அமர்வை நிறைவு செய்யவும். நம் சமூகத்துக்காகவும், பங்கேற்போருக்காகவும், அவர்களுடையக் குடும்பத்திற்காகவும் சிறப்பாகச் செபிக்கவும்.

## பிற்சேர்க்கை: நடவடிக்கைகள்
நம் ஆன்மீகப் பயணத்தை நம் கிறிஸ்துவ சகோதரர் சகோதரிகளுடன் மேம்படுத்தச் செயல்பாடுகளும், நடவடிக்கைகளும் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ளது.

# குழுச் சிந்தனைகளை வழிநடத்துதல்

இரண்டு, மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன். [மத்தேயு 18:20]

கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து கவனமாய் இருங்கள். குழுவினிடையே பேசும் போதும், செயல்படும் போதும் பணிவுடனும் மரியாதையுடனும் இருங்கள். உரையை தியானத்துடன் வாசியுங்கள். நற்செய்தி வாசகங்களுக்கு உங்களது சிறந்த கவனத்தைக் கொடுங்கள்.

---

எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல், அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன். [யோவான் 17:21]

அனைவரையும் உபசரியுங்கள். புதிய வருகையாளர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரையும் சமூகத்தின் அன்பிற்குரிய அங்கங்களாக நடத்துங்கள். அமர்வில் அனைவரும் பங்கேற்கும்படி ஊக்குவியுங்கள். அனைவருக்கும் புரியும்படியான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

---

அவர்களுள் பெரியோர் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துகின்றனர். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. [மாற்கு 10:42-43]

எப்போதும் யாரிடமும் அதிகாரத் தோரணையுடனும், அகந்தையுடனும், பிறருக்கு அறிவுரை கூறும் வகையிலும், யாவற்றையும் அறிந்த மாதிரி அல்லது என்ன செய்ய வேண்டுமென்று பிறருக்கு எடுத்துக்கூறும் வகையிலும், நடந்து கொள்ளக்கூடாது.

---

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். [லூக்கா 9:23]

இந்தச் சிந்தனைகளுக்கு மிகவும் அடிப்படையானது இறை வார்த்தை, திருச்சபையின் போதனைகள் மற்றும் கிறிஸ்துவின் பால் நம்மை மனமாறச் செய்யும் அழைப்பு. இந்த அமர்வில், உங்கள் பகிர்வு வேறு கருத்து நோக்கித் திசைமாறிச் சென்றால், அன்றைய கருத்துக்கு ஆதரவு தரும்படி அழைக்கவும்.

---

ஏனெனில் நீங்கள் பேச வேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்கு கற்றுத் தருவார். [லூக்கா 12:12]

பகிர்ந்து கூற வேண்டியதை முன் கூட்டியே தயாரிக்கவோ, இதற்காக ஒருவரை நியமிக்கவோ வேண்டாம். இறைவனின் ஆவி இயல்பான கருணை மிகுந்த குணத்துடன் செயல் படுவதற்குக் காத்திருக்கவும். இக்கருத்து தொடர்பாக யாராவது தன்னிச்சையாகத் தங்களுடைய விசுவாச அனுபவத்தைப் பகிர வந்தால், அவருக்கு வாய்ப்பளித்து நன்றி கூறுங்கள்.

---

உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்போது உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றி புகழ்வார்கள். [மத்தேயு 5:16]

இச்சிந்தனைகள் இறைவனுடைய விருப்பத்தைச் செயல்படுத்தச் சவால் விடுகின்றன. அதாவது நாம் சந்திக்கும் நபர்களிடம் இயேசுவின் அன்பைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. இதற்காக அடுத்த குழு அமர்வில் சிறிது நேரம் செலவழித்து, இதையே சென்ற வாரத்தில் நாம் எவ்வாறு சிந்தித்தோம் என்பதைப் பற்றி ஆராயவும்.



# வார்த்தை புதுப்பிக்கிறது

## தவக்காலத்தின் ஞாயிறுகள்

[மூன்றாம் ஆண்டு]

## தவக்காலத்தின் ஞாயிறுகள் (மூன்றாம் ஆண்டு)

# வார்த்தை புதுப்பிக்கிறது

| தவக்கால வாரம் | வாசகங்கள் | கருப்பொருள் |
|---|---|---|
| தவக்காலத்தின் முதல் ஞாயிறு | இணைச்சட்டம் 26:4-10<br>உரோமையர் 10:8-13<br>லூக்கா 4:1-13 | வார்த்தை வாழ்வுக்கு வழிவகுக்கிறது |
| தவக்காலத்தின் 2ம் ஞாயிறு | தொடக்க நூல் 15:5-12,17-18<br>பிலிப்பியர் 3:17-4:1<br>லூக்கா 9:28-36 | வார்த்தையால் உருமாற்றமடைதல் |
| தவக்காலத்தின் 3ம் ஞாயிறு | விடுதலைப்பயணம் 3:1-8,13-15<br>1 கொரிந்தியர் 10:1-6,10-12<br>லூக்கா 13:1-9 | வார்த்தையால் மனமாற்றமடைதல் |
| தவக்காலத்தின் 4ம் ஞாயிறு | யோசுவா 5:9-12<br>2 கொரிந்தியர் 5:17-21<br>லூக்கா 15:1-3, 11-32 | வார்த்தையில் உயிரோடிருத்தல் |
| தவக்காலத்தின் 5ம் ஞாயிறு | எசாயா 43:16-21<br>பிலிப்பியர் 3:8-14<br>யோவான் 8:1-11 | வார்த்தையில் வேரூன்றல் |
| திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு | லூக்கா 19:28-40<br>எசாயா 50:4-7<br>பிலிப்பியர் 2:6-11<br>லூக்கா 22:14 - 23:56 | வாழும் வார்த்தைக்குள் ஒரு திருப்பயணம் |

## தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு


# வார்த்தை வாழ்வுக்கு வழிவகுக்கிறது

### தொடக்கச் செபம்

எல்லாம் வல்ல இறைவா,

எங்களுடைய வாழ்வை மாற்றவும், எங்களுடைய நம்பிக்கையைப் புதுப்பிக்கவும், எங்களுடைய சமூகத்திற்குப் புத்துயிர் அளிக்கவும், உம்மோடு உள்ள உறவில் நாங்கள் வளரவும் நீர் எங்களை அழைக்கின்றீர். நீர் தேர்ந்தெடுத்த உம் மக்களுக்கு மோசே வழியாகக் கட்டளைகளை அளித்தீர். திருச்சபை வழியாக நீர் எங்களுக்கு உதவவும் வழிநடத்தவும் இந்தப் புனிதமானத் தவக்காலத்தை கொடுத்துள்ளீர். திருச்சட்டத்தின் ஆவி எங்கள் இதயங்களில் எழுதப்படவும், உமது வார்த்தை எங்களை நிலைவாழ்வுக்கு வழிநடத்தவும் அருள் தாரும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாகவும், தூய ஆவியார் வழியாகவும் உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.



## இறைவார்த்தை

### முதல் வாசகம்: இணைச்சட்டம் 26:4–10

இந்த இணைச்சட்ட நூல் விவிலியத்தின் மிகவும் கவர்ச்சிகரமான, முக்கியமான நூல். இதன் பெயர் இரு கிரேக்க வார்த்தைகளிலிருந்து பெறப்பட்டது, deuteros என்றால் இரண்டாவது, nomos என்றால் சட்டம், இரண்டாவது சட்டம். இன்றைய வாசகப் பகுதி, வாரங்களின் விழாவைக் கொண்டாடுவதற்கான வழிமுறைகளை நிறுவுகிறது. இஸ்ரயேலர் தங்கள் அறுவடையின் முதற்கனிகளை ஆண்டவருக்குக் காணிக்கையாகக் கொடுக்க இங்கு கட்டளையிடப்பட்டுள்ளது. மீட்கும் இறைவனின் செயல்களை நினைவு கூறுவதோடு அங்கு காணிக்கையும் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. 5ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நிரந்தரக் குடியற்ற அரமேயரான என் தந்தை' என்பது எகிப்தில் அடிமைத்தனத்தில் வீழ்ந்த யாக்கோபின் குலத்தைக் குறிக்கிறது. இருப்பினும், நம் தந்தையாகிய இறைவன் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு, 'பாலும் தேனும் வழிந்தோடும்' வாக்களிக்கப்பட்ட நாட்டில் புதிதாக வாழ்வை ஆரம்பிக்க அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். தாங்கள் ஆக்கிரமித்த நிலம், அவர்கள் அனுபவித்த விளைச்சல், இறுதியில் தங்கள் வாழ்நாள் அனைத்தும் இறைவனின் கொடை என்பதை நினைவூட்டி, இந்த நம்பிக்கைக்கு இஸ்ரயேலர் எப்போதும் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த முதற்கனிகளின் காணிக்கை.

### இரண்டாம் வாசகம்: உரோமையர் 10:8–15

மோசேவுக்கு வழங்கப்பட்டக் கட்டளைகளிலிருந்தும், இணைச்சட்ட நூலிலுள்ள அதன் புதுப்பிக்கப்பட்டச் சட்டங்களிலிருந்தும் நாம் இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்ட புதிய சட்டத்தின் கருப்பொருளுக்கு நாம் செல்வோம். இதுவே தூய பவுல் உரோமையருக்கு எழுதியத் திருமுகத்தின் கருப்பொருள். மோசேயின் கட்டளைகள் வரலாற்றின் ஒரு குறிப்பிட்டக் காலத்தில் எபிரேயர்களுக்காக வழங்கப்பட்டச் சட்டங்களும் சடங்குகளும் நிரம்பியத் தொகுப்பு என்று தூய பவுல் நம்பினார். இவற்றைக் கடமையெனப் பின்பற்றுவதால் நாம் விண்ணகம் செல்ல முடியாது. நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், திருச்சட்டத்தின் ஆவி நம் இதயத்திலும் உள்ளத்திலும் எழுதப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்துவின் மீட்பின் வல்லமையால் உண்மையான விசுவாச அறிக்கை செய்வதால் மட்டுமே இது நிரூபிக்கப்படும். இயேசு கிறிஸ்துவின் மீது முழு நம்பிக்கை வைத்து, அவரை மட்டுமே நம்புவதால் மட்டுமே நம் தந்தையாகிய இறைவனுடனான உறவைப் புதுப்பிக்க முடியும். இந்த உறவின் வாக்குறுதி வரலாற்றின் ஒரு குறிப்பிட்டக் காலத்தில் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு மட்டுமல்ல, மாறாக, இது எல்லா மக்களுக்கும் எக்காலமும் உரியது.

**நற்செய்தி வாசகம்: லூக்கா 4:1–13**

தவக்காலத்தின் முதல் வார நற்செய்தி எப்போதும் இயேசுவின் நாற்பது நாள் பாலைவனப் பயணத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது. பாலைவனம் என்பது நாம் எல்லாவற்றிலுமிருந்துத் தனித்திருப்பதையும், நம் தந்தையாகிய இறைவனுடன் நேரத்தைச் செலவிடுவதையும், அவரிடமிருந்து நம்மை விலக்கி வைக்கும் கவனச் சிதறல்களிலிருந்து விடுபட்டிருப்பதையும் குறிக்கிறது. பொதுவாக நாம், பாலைவனம் போன்ற எல்லாவற்றையும், அமைதி, வெறுமை, தனிமை, வசதியின்மை (இணையம்) உட்பட, அனைத்தையும் நாம் தவிர்க்கிறோம். ஆயினும், திருச்சபையின் பாரம்பரியமான இந்தத் தவக்காலத்தை இயேசுவின் நாற்பது நாள் பாலைவன வாழ்வைக் காட்டியே அனுசரிக்க நாம் ஈர்க்கப்படுகிறோம். எனவே, நாமும் இயேசுவோடு இந்தப் பயணத்தில் இணைந்து செபிக்கவும், தவம் செய்யவும், நம் சோதனைகளை எதிர்கொள்ளவும், நம் தந்தையாகிய இறைவன் மீது நாம் கொண்ட அர்ப்பணிப்பையும் விசுவாசத்தையும் புனிதப்படுத்தவும் நாம் அழைக்கப்படுகிறோம்.



## தியானிப்போம்

சோதனை என்றால் என்ன? வெளித்தோற்றத்தில் நல்லதாகத் தோன்றி, நம்மிடம் இல்லாத, ஆனால் மிக விரும்பும் ஒன்றின் மீதான ஈர்ப்பே சோதனை எனப்படும். இது ஆச்சரியமாகத் தோன்றலாம். பலர் சோதனையை மோசமான ஒரு ஆசை என்று விளக்கலாம் அல்லது வரையறுக்கலாம். இருப்பினும், நாம் எதிர்கொள்ளும் பெரும்பாலானச் சோதனைகள் அனைத்தும் ஒப்பீட்டளவில் நல்லதொன்றை உள்ளடக்கியது. ஒரு குறிப்பிட்ட உணவு, ஒரு குறிப்பிட்டவருடன் நெருக்கமான உறவு, வல்லமையும் அதிகாரமும் கொண்ட பதவி, ஒரு புதிய கார், புதியக் கைப்பேசி. இருப்பினும், நாம் விரும்பும் உணவு நம் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல, புது உறவு நம் வாழ்க்கைத் துணைக்கு நாம் செய்த அர்ப்பணிப்பின் நிராகரிப்பு, நாம் விரும்பும் பதவி சேவையால் தூண்டப்படாமலிருக்கலாம், நம்மிடம் இருப்பது நன்றாக வேலை செய்வதால் புதிய வாகனமோ கைப்பேசியோ தேவையற்றதாக இருக்கலாம்.

இன்றைய நற்செய்தியில், இயேசு பாலைவனத்தில் அலகையினால் சோதிக்கப்பட்டார். அலகை அவருக்கு மூன்று நல்லவற்றை முன்மொழிகிறது. இயேசு கல்லை அப்பமாக மாற்ற ஆசைப்படுகிறது, உலகிலுள்ள அனைத்து அதிகாரத்தையும் மேன்மையையும் அவருக்கு அளிக்க முன்வருகிறது, இறுதியாக, தனது வல்லமையை ஒரு காட்சியாக உருவாக்கிக் காட்டுகிறது. ஏன் முடியாது என நாம் நினைக்கலாம். இயேசு ஏன் தனது வல்லமையைப் பயன்படுத்தக் கூடாது? கல்லை அப்பமாக மாற்றி உலகிலுள்ளப் பசித்திருப்போருக்கு உணவளிக்கலாமே? எல்லா அதிகாரத்தையும் மேன்மையையும் தனக்கு எடுத்துக்கொள்வதால் வன்முறைகளையும் ஊழல்களையும் ஒழிக்கலாமே? தனது வல்லமையை முழுமையாக வெளிப்படுத்தினால், மக்கள் அனைவரும் அவரை நம்புவார்களே?

ஆனால், உண்மையில் நல்லது எது, நல்லதாகத் தோன்றுவது எது, பொய்யானது எது என்று நாம் பகுத்தறிந்துக் கற்றுக்கொள்ளவே இயேசு தூய ஆவியாரால் பாலைவனத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

பாலைவனத்தில் இயேசு, நிலைவாழ்வுக்கு வழிநடத்தும் இறைவார்த்தையைப் பகுத்தறிந்து கேட்க முயல்கிறார். இந்த இறைவார்த்தைக்கே நாம் மிக விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தவக்காலம் என்பது இந்த இறைவார்த்தையை நாம் பகுத்தறிந்து கேட்க வேண்டியக் காலம். இறைவார்த்தைக்குச் செவிகொடுத்தால் மட்டுமே நாம் வாழ்வடைவோம்.

# வார்த்தை
## வாழ்வுக்கு வழிவகுக்கிறது

### சிந்திப்போம்

**பகிர்வுக்கானக் கேள்விகள்:**

*இறைவார்த்தைப் பகுதியில் எது உங்கள் மனதைத் தொட்டது? கீழுள்ளக் கேள்விகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள். நீங்கள் குழுவாக இருந்தால் இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

தவக்காலப் பயணத்தைத் தொடங்கும் எனக்கு என் வாழ்வின் பாதையைக் காட்டிய இறை வார்த்தை எது? என் வாழ்வில் நான் எவ்வாறு இறைவார்த்தையால் வழிநடத்தப்பட்டேன்?

**துணைக் கேள்விகள்:**

*உங்கள் குழுவின் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்து, சிறிது நேரம் ஒதுக்கி இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

**அன்பியங்களுக்காக:**

ஒரு கிறிஸ்தவ சமூகமாக, நாம் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சோதனைகள் என்ன? உணவுக்கும் தினசரிப் பராமரிப்புக்கும் காட்டிய அக்கறை சமூகக் கூட்டங்களிலிருந்து நம்மை விலக்கி வைக்கிறதா? இந்த தவக்காலத்தில் நாம் எப்படி ஒருவரையொருவரும் இறைவனையும் நம்பி வளர திட்டமிடுகிறோம்?

**ஆலயப் பணிக்குழுக்களுக்காக:**

பணிக்குழுத் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் நாம் எதிர்கொள்ளும் சோதனைகள் என்ன? தவக்காலம் புதுப்பித்தலுக்கும் வளர்ச்சிக்கும் உரிய நேரம். நமது ஆலயப்பணிகளில் தொடரும் சோதனைகளை எவ்வாறு எதிர்கொள்ளத் திட்டமிடுகிறோம்?

**குடும்பங்களுக்காக:**

இணைச்சட்டமும் தூய பவுலும் திருசட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு அப்பால் செல்ல நம்மை அழைக்கிறது. இறைவார்த்தையில் நம் குடும்ப வாழ்வை நாம் எவ்வாறு மையப்படுத்துவது? நாம் குடும்பமாக இறைவார்த்தையை வாசிக்கிறோமா? உயிரளிக்கும் வார்த்தைகளைப் பேச இறைவார்த்தை நம்மை வழிநடத்துகிறதா?

### நம் வாழ்விற்காக

விசுவாசத்திற்கும் உலக வழிகளுக்கும் இடையிலான உரையாடலில், இறைவார்த்தை என் கால்களுக்கு ஒரு விளக்காக மாறி, தாராளமயமான வாழ்வுக்கு வழிவகுக்கிறது.

### நற்செயல் புரிவோம்

உங்கள் வாழ்விலுள்ள 10 சிரமங்களையும், 10 சவால்களையும் பட்டியலிடுங்கள். அதன் ஒவ்வொன்றுக்கும் பொருந்தக் கூடிய இறைவார்த்தைகளைக் கண்டறியுங்கள். இறையரசை நோக்கிய உங்கள் திருப்பயணத்தைத் தொடர இந்த இறைவார்த்தைகள் உங்களுக்கு நல்ல வழிகாட்டுதலையும் ஆறுதலையும் அளிக்குமா என்று சிந்தியுங்கள்.

# தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு

## இறுதி செபம்

எங்கள் அன்பான இரக்கமுள்ள தந்தையே,

தூய ஆவியாரால் இயேசுவை பாலைவனத்திற்கு அழைத்துச் சென்று, அலகையின் சூழலிலேயே அவனை எதிர்கொள்ளச் செய்தீரே. உமது வார்த்தைகளாலே இயேசுவும் உறுதியுடன் சோதனைகளை எதிர்கொண்டார். உமது வார்த்தை இயேசுவுக்கு உயிரளித்ததால் இயேசுவை அலகையால் வெல்ல முடியவில்லை. இந்த உயிரளிக்கும் வார்த்தையின் வல்லமையே எங்களுக்கு ஒரு நல்ல உதாரணம். நாங்கள் வாழ்க்கையின் எல்லா விதமானச் சூழ்நிலைகளை எதிர்கொண்டாலும், உம் வார்த்தையை நோக்கித் திரும்புவதன் வழியாக உம் திருமகன் இயேசுவின் சீடர்களாக வாழ்வதற்கான எங்கள் அர்ப்பணிப்பில் நாங்கள் வளர இந்தத் தவக்காலம் எங்களுக்கு உதவுவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.



**வார்த்தை**

**வாழ்வுக்கு வழிவகுக்கிறது**

## என் தவக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

## தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு


# வார்த்தையால் உருமாற்றமடைதல்

### தொடக்கச் செபம்

விண்ணகத் தந்தையே இறைவா,

உமது வார்த்தையின் கொடைக்காக நாங்கள் உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கிறோம். நீர் எங்களுக்கு அளித்த வாக்குறுதியால் கிறிஸ்து இயேசுவின் மாட்சியில் நாங்களும் உயிர்த்தெழுவோமாக. இந்தத் தவக்காலத்தின் இரண்டாவது வாரத்தை, நாங்கள் உம்மையும் உம் புதுப்பித்தலையும் நோக்கி விடாமுயற்சியுடன் தொடர உமது வார்த்தை எங்களுக்குத் தொடர்ந்து உதவுவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.



## இறைவார்த்தை

### முதல் வாசகம்: தொடக்க நூல் 15:5–12, 17–18

இந்த வாசகம் நம் தந்தையாகிய இறைவன் ஆபிராமுக்கு அளித்தத் தம் வாக்குறுதியைக் காட்டுகிறது. இது, அவரது சந்ததி பற்றிய வாக்குறுதியுடன் தொடங்கி (15:5) நிலத்தைப் பற்றிய வாக்குறுதியுடன் முடிவடைகிறது (15:18). இஸ்ரயேல் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் இரு வாக்குறுதிகள்.

இந்த வாக்குறுதிகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, நம் தந்தையாகிய இறைவன், அவரை நம்பும்படி ஆபிராமையும் அவரது சந்ததியினரையும் கேட்டுக்கொள்கிறார். இறைவனின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்த ஆபிராமின் செயல் ஒரு நீதிச் செயலாகக் 6ம் வசனத்தில் காட்டப்பட்டுள்ளது. தந்தையாகிய இறைவனுடன் ஆபிராம் கொண்ட உறவின் வெளிப்பாடு புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் தொடர்ந்து காட்டப்படுகிறது.

இந்த வாக்குறுதிகள் ஒரு சடங்குடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி, வாக்குறுதியைக் கடைப்பிடிப்பவர் பலியிடப்பட்டுள்ள விலங்குகளுக்கு இடையில் இரத்தத்தில் நடக்க வேண்டும். வாக்குறுதியைக் கடைப்பிடிக்கத் தவறினால் இந்த விலங்குகளுக்கு நேர்ந்த கதி தனக்கும் கிடைக்கட்டும் என அவர் உறுதிமொழியைச் செய்கிறார் (எரே 34:18). இது நம் தந்தையாகிய இறைவனுக்கும் ஆபிராமுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையை.

### இரண்டாம் வாசகம்: பிலிப்பியர் 3:17–4:1

தூய பவுல், தனது வாசகர்கள் தன்னைப் பின்பற்றுபவர்களாகவும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகவும் இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறார் (1 தெச 1:6). கிறிஸ்துவின் இந்த சாயலில் வாழ்வதால் எல்லாரும் விடாமுயற்சியுடன் இருக்க முடியாது என்பதையும், ‘கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாய் நடப்பதால்’ பலர் தவறி விழுந்துவிடுவதையும் உணர்ந்து அவர் தனது வருத்தத்தை இங்கு வெளிப்படுத்துகிறார்.

தூய பவுல் இந்த மடலை எழுதியக் காலத்தில், கிறிஸ்தவர்கள் யூதச் சட்டங்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கவில்லை, உணவுக் கட்டுப்பாடுகள், விருத்தசேதனம் உட்பட. இருப்பினும், சில கிறிஸ்தவக் குழுக்கள் இந்தச் சட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றன என்பதை அவர் அங்கீகரிக்கிறார். இது, கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிதலாலும் சட்டச் செயல்களாலும் மீட்கப்பட்டார்களா அல்லது விசுவாசத்தால் மீட்கப்பட்டார்களா என்ற முரண்பாடுக்கு வழிவகுத்தது.

‘நாம் இவ்வுலகத்தின் குடிமக்களல்ல, விண்ணகமே நம் தாய்நாடு. அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வந்து, நம்மை உருமாற்றி, அவருடைய மாட்சியில் நம்மைப் பங்கு பெறச் செய்வார்’ என்பதை அவர் நினைவுபடுத்துகிறார்.

**நற்செய்தி வாசகம்: லூக்கா 9:28–36**

உருமாற்றம் பற்றிய லூக்காவின் விவரிப்பில், இயேசுவின் முகத்தோற்றம், சினாய் மலையில் நம் தந்தையாகிய இறைவனை மோசே சந்தித்த போது ஏற்பட்ட முகத் தோற்றத்திற்கு இணையாக காட்டுகிறார் (விப 34:29). இருப்பினும், இயேசுவின் ஆடைகள் பற்றிய விளக்கத்தின் உள்ளடக்கம் வானதூதர்களின் தோற்றத்தை லூக்கா விவரிக்கப் பயன்படுத்துவதைப் போல் உள்ளது (லூக் 24:4), திபணி 1:10). இயேசுவின் இந்த உருமாற்றம் தந்தையாகிய இறைவனுடன் ஏற்பட்டச் சந்திப்பால் மட்டுமல்ல, இயேசுவே தெய்வீக மாட்சியின் ஆதாரமாக இருக்கிறார் என்பதை இது வெளிப்படுத்துகிறது. சீடர்கள் ‘மாட்சியோடு இலங்கிய இயேசுவைக் கண்டபோது’ என்ற 32ம் வசனத்தின் வாயிலாக இந்தக் கருத்து மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் ‘சட்டங்களும் இறைவாக்கினர்களும்’ கூறுவது போல, இயேசுவே எல்லாவற்றுக்கும் இறுதி நிறைவேற்றமாக இருப்பார் என்பதை வெளிக்காட்டவே மோசே மற்றும் எலியாவின் இருப்பின் முக்கியத்துவத்தை லூக்கா நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறார். 35ம் வசனத்திலுள்ள நம் தந்தையாகிய இறைவனின் குரல் இயேசுவின் திருமுழுக்கின் போது ஏற்பட்டக் குரலை எதிரொலிக்கிறது (லூக் 3:22). இருப்பினும், இயேசுவிடம் நேரடியாகப் பேசுவதற்குப் பதிலாக, இச்செய்தி இங்குள்ள சீடர்களுக்கு அனுப்பப்பட்டு, இயேசுவுக்கும் அவருடையத் தந்தைக்கும் இடையிலான உறவை விரிவுபடுத்தவும், இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கான அழைப்பையும் விடுக்கிறது.



## தியானிப்போம்

உருமாற்றத்தின் கருப்பொருள் இந்த வாரத்தின் மூன்று வாசகங்களிலும் ஊடுருவுகிறது. இது நமது இந்த ஆண்டுத் தவக்காலச் சிந்தனையான 'வார்த்தையால் உருமாற்றமடைதல்' என்றக் கருப்பொருளுடன் மிகவும் ஒத்திருக்கிறது. முதல் வாசகத்தில், ஆபிராமுக்கும் நம் தந்தையாகிய இறைவனுக்கும் இடையிலான உறவின் தன்மை, இறைவன் அவருக்கு அளித்த வாக்குறுதியால் உருமாற்றம் பெறுகிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒரு புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கை உறவின் ஆரம்பம், தந்தையாகிய இறைவனுடனான நமது உறவில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இரண்டாம் வாசகத்தில், தூய பவுல் இந்த உலகில் நாம் வெறும் பார்வையாளர்கள் என்றும், நேரம் வரும் போது, கிறிஸ்து இயேசு 'தமது ஆற்றலால், தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றுவார்' என்றும் வலுவாக நினைவூட்டுகிறார். நற்செய்தியில், இயேசுவின் மாட்சிமிக்கத் தெய்வீகத்தன்மையை சீடர்கள் காண நம் தந்தையாகிய இறைவன் எப்படி அனுமதித்தாரோ, அதே போல் கிறிஸ்துவின் வல்லமையினால் அதே மாட்சியில் நாமும் சேர்க்கப்படுவோம் என்பதைத் தூய பவுல் உறுதிப்படுத்துகிறார்.

மூன்று வாசகத்தையும் நாம் கூர்ந்து கவனித்தால், 'விசுவாசத்தில் கீழ்ப்படிதல்' என்ற அருமையானக் கருப்பொருளை நாம் காண முடியும். தந்தையாகிய இறைவன் ஆபிராமை நம்பும்படி கேட்டார், அவரும் கீழ்ப்படிந்தார். தூய பவுல் தன்னைப் பின்பற்றி ஆண்டவரில் உறுதியாக நிற்கும் படியும், நாம் வெகுமதி பெறுவதற்கு விசுவாசம் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். உருமாற்றக் கதையில், தந்தையாகிய இறைவன் 'இவருக்குச் செவிசாயுங்கள்' என்று சீடர்களுக்கு கட்டளையிடுகிறார். அதே சமயம் இயேசுவிடமிருந்தத் தெய்வீகச் சாயலை வெளிப்படுத்த, நம் தந்தையாகிய இறைவன் இயேசுவின் மனிதச் சாயலை அகற்றினார், சீடங்களின் நம்பிக்கையும் புதுப்பிக்கப்பட்டது.

எனவே, இறைவார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது. அது நம் வாழ்வை இயக்கி, வழிநடத்தி, புதுப்பிக்கிறது. இருப்பினும், நாம் அனுமதித்தால் மட்டுமே அது சாத்தியம். நம் தந்தையாகிய இறைவனுடைய வாக்குறுதி நம்மில் நிறைவேற நாம் அவர் மீது முழு விசுவாசம் கொண்டு, வார்த்தையில் கிறிஸ்து இயேசு வழியாக வெளிப்படுத்தப்பட்ட அனைத்தையும் நாம் உறுதியாகப் பின்பற்றி நடக்க வேண்டும்.

## சிந்திப்போம்

### பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இறைவார்த்தைப் பகுதியில் எது உங்கள் மனதைத் தொட்டது? கீழுள்ளக் கேள்விகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள். நீங்கள் குழுவாக இருந்தால் இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்ததால் மக்கள் பலரின் வாழ்க்கை மாறியது. அவர்கள் புதுப்படைப்பானார்கள். உங்கள் வாழ்வின் எந்தப் பகுதியில் இத்தகைய மாற்றம் நிகழலாம்?

### துணைக் கேள்விகள்:

*உங்கள் குழுவின் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்து, சிறிது நேரம் ஒதுக்கி இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

### அன்பியங்களுக்காக:

நமது சமூகத்தைப் புதுப்பிக்க நாம் எவ்வாறு தொடர்ந்து இறைவார்த்தையை அனுமதிப்பது? நமது சமூகத்தின் எந்தப் பகுதிகளில் புதுப்பித்தல் தேவை?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

இறைவார்த்தைக்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிதல் இல்லாமல் பணிக்குழுவில் மாற்றம் நிகழ முடியாது. இந்தத் தவக்காலத்திலிருந்து உங்கள் பணிக்குழு எந்த வார்த்தைகளைப் பின்பற்றத் தேர்ந்தெடுக்கும்? இறைவார்த்தையில் காணப்படும் 'சட்டத்தையும் இறைவாக்கினர்களையும்' அறிந்து கொள்ள உங்கள் பணிக்குழு, உறுப்பினர்களுக்கு எவ்வாறு உதவுகிறது?

### குடும்பங்களுக்காக:

இறைவார்த்தையால் மாற்றப்பட்டிருக்கிறார் என்று உங்கள் குடும்பத்தில் யாரை நீங்கள் எதிர்நோக்குவீர்கள்? அவரை நீங்கள் பின்பற்றுகிறீர்களா? உங்கள் குடும்பம் எவ்வாறு ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்ள முடியும்?

## நம் வாழ்விற்காக

உருமாற்றமடைய, இறைவனின் வாக்குறுதிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு, அவருடைய வார்த்தையால் வழிநடத்தப்படுங்கள்.

## நற்செயல் புரிவோம்

உங்கள் வாழ்விலுள்ள சிரமங்களோடும் சவால்களோடும் தொடர்புபடுத்திய இறைவார்த்தைகளை உங்களால் பயன்படுத்த முடிந்ததா என்று ஆய்ந்தறியுங்கள்.

## தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு


# வார்த்தையால் உருமாற்றமடைதல்

### இறுதி செபம்

விண்ணகத் தந்தையே இறைவா,

கிறிஸ்துவில் புதுவாழ்வு அளிக்கும் வாக்குறுதிக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களது திருப் பயணத்தில் எங்களை வழிநடத்தும் வார்த்தையாக உமது திருமகனைக் கொடையாக அளித்ததற்காகவும் உமக்கு நன்றி. உமது வார்த்தையைச் சிந்திப்பதால் எங்கள் வாழ்க்கை முறை மாற்றமடைவதற்கும், அதன் வழியாக உம்மை மாட்சிப்படுத்தவும் அது வழி வகுக்கிறது. இந்தத் தவக்காலத்தில், நம்பிக்கையின் புதுப்பித்தலுக்கு எங்கள் இதயங்களைத் திறப்பதற்கான அருளை வழங்கியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.




# வார்த்தையால் மனமாற்றமடைதல்

## தொடக்கச் செபம்

தந்தையே இறைவா,

ஆவியையும் உயிரையும் கொண்டுள்ளது உமது வார்த்தை. இது எங்களின் ஆழ்ந்த சிந்தனையை ஊடுருவும் வல்லமை கொண்டது. நீர் உமது சாயலில் உருவாக்கிய உண்மைத்தனத்திற்கு எங்களை ஆழமாக வழிநடத்த வல்லது. நாங்கள் சிந்திக்க இருக்கும் உமது அன்பின் அடையாளமான இந்த வார்த்தையே நீர் எங்களுக்கு அளித்தக் கொடை. நாங்கள் சிந்திக்கும் இந்தச் செப நேரம், உமது நிலையான வார்த்தையான கிறிஸ்து இயேசு வழியாக எங்களில் ஏற்படும் மனமாற்றத்திற்காக நாங்கள் உம்மைப் போற்றிப் புகழ்ந்து மாட்சியளித்து, நன்றி செலுத்தும் நேரமாக அமைவதாக.

ஆமென்.



## இறைவார்த்தை

### முதல் வாசகம்: விடுதலைப்பயணம் 3:1–8, 13–15

நம் தந்தையாகிய இறைவன் தனது சொந்தப் பெயரை வெளிப்படுத்தும் இந்தத் தருணம் இஸ்ரயேல் வரலாற்றில் அவர்களின் எதிர்பார்ப்பைத் தூண்டும் அளவுக்கு முக்கியமானது. எகிப்தின் அடிமைத்தனத்தின் விரக்தியிலிருந்த இஸ்ரயேல் மக்கள் தங்களைக் காப்பாற்ற வல்லவரை நோக்கிக் கதறியழுது அழைக்கும் தருணமிது.

எரிகின்ற முட்புதர், எரிகிறது ஆனால் எரிபடவில்லை. 'விசித்திரமான' ஆனால் மிகவும் குறிப்பிடத்தக்கக் காட்சி. ஒரு சாதாரண நிகழ்வில் அசாதாரணமாக இறைவன் தன்னை வெளிப்படுத்துகிறார். 'யாவே' (YHWH), 'இருக்கின்றவர் நானே' (வசனம் 14) என்ற பொருள் கொண்ட நம் தந்தையாகிய இறைவன் வெளிப்படுத்தியப் பெயர் இன்னும் அசாதாரணமானது. 'என்றும் உங்களுக்காக இருக்கிறவர் நானே' என்பது இறையியல் வல்லுனர்களின் கருத்து.

தான் யார் என்பதை வெளிப்படுத்திய பின், இறைவன் யார், அவர் எப்படிச் செயல்படுகிறார், என்பதை தனக்குச் சொந்தமான மக்களிடம் வெளிப்படுத்தும் பணிக்கு நம் தந்தையாகிய இறைவன் மோசேயை அனுப்புகிறார்.

### இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 10:1–6, 10–12

நம் தந்தையாகிய இறைவனுடனான உறவை இஸ்ரயேல் மக்கள் ஒரு பொருட்டாக நினைத்து ('தான் பாதுகாப்பாக இருப்பதாக நினைக்கும் மனிதர்') மனநிறைவடைந்தனர். தங்களின் எதிர்பார்ப்புகளின்படி, அவர்கள் மீட்கப்படவும் நிறைவு பெறவும் முழுத் தகுதி பெற்றவர்கள் என உணரத் தொடங்கினர். நம் தந்தையாகிய இறைவனால் தினமும் காலையில் மன்னாவும் காடையும் பசியாரப் பெற்று, பாறையிலிருந்து தண்ணீரால் தாகம் தீர்க்கப்பட்டு, பகலில் மேகத் தூணாலும், இரவில் நெருப்புத் தூணாலும் பாதுகாக்கப்பட்டு வந்தபோதிலும் அவர்கள் கடவுளுக்கு எதிராக முணுமுணுத்துப் புகாரளித்தனர்.

எதுவும் அவர்களின் எண்ணப்படி நடக்காதபோது குறை கூறினர் அல்லது அவர்களின் இஷ்டப்படி, தங்கக் கன்றுக்குட்டியை வடிவமைத்து வணங்குவது போன்ற செயல்களைச் செய்தனர். நம் தந்தையாகிய இறைவனின் ஞானம் உண்மையில் அவர்களின் பார்வையில் ஞானமல்ல என்று நினைக்கும் அளவுக்கு இந்தக் குறைகூறும் செயலே, அவர்கள் தங்கள் இஷ்டப்படி செயல்களைச் செய்வதற்கும், வாழ்க்கையை வாழ்வதற்கும் சிறந்த வழி இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. இந்த வீண் பெருமையே பலரது வீழ்ச்சிக்குக் காரணம்.

**நற்செய்தி வாசகம்: லூக்கா 13:1–9**

நாம் நமது விசுவாசத்தில் எப்போதும் மனநிறைவு கொள்ளாமல், எப்போதும் மனந்திரும்பும் முயற்சியோடு இருக்க வேண்டுமென இயேசு தம் சீடர்களுக்கு வலுவான வார்த்தைகளால் நினைவூட்டுகிறார். மனநிறைவு என்றும் தற்பெருமையை முன்னிறுத்துகிறது, மனந்திரும்புதல் என்றும் தாழ்ச்சியை முன்னிறுத்துகிறது. நமது தாழ்ச்சியுள்ள இதயம் நம் தந்தையாகிய இறைவனின் இரக்கத்தைக் காணச் செய்யும். ஏனென்றால் நாம் நமது உள்ளத்தை முழுமையாக அவரிடம் திருப்பி, அவருக்காக நம் இதயங்களில் ஒரு இடத்தை உருவாக்குகிறோம்.

காய்க்காத அத்தி மரத்திற்கும் அவர் உரமிடக் காத்திருப்பது போல, நம் இறைவனின் உள்ளத்தில் எப்போதும் ஒரு இடம் நமக்காக இருக்கும். தோட்டக்காரரான நம் இறைவன் நமது ஆன்மாவை வளர்க்கவும், நமது ஆவியைப் பராமரிக்கவும் நம் உள்ளமெனும் தோட்டத்தை ஆழமாகத் தோண்டுவார். ஆனால், நாமோ நமது பெருமைக்குரிய மனநிறைவுவோடும், அகங்காரத்தோடும் இரக்கத்திற்காகவும் கருணைக்காகவும் மேல்நோக்கிப் பார்ப்பதை நிறுத்திவிடுகிறோம். இருப்பினும், தாழ்ச்சியுள்ள மனந்திரும்புதலோடு நமது ஆன்மாவைத் தோண்ட நமது தோட்டக்காரரான இறைவன் மீது நம்பிக்கை வைத்து அனுமதி கொடுக்க வேண்டும்.

## தியானிப்போம்

இருப்பதாகப் பெயரிடுதல்.

அதன் பொருள் என்ன? பொதுவாக, 'நீங்கள் யார்?' என்று நம்மிடம் கேட்கப்பட்டால். நமது உள்ளுணர்வு நம்மை அறியாமலே கொடுக்கும் பதில், நமது பெயர். நம் பெயருக்கு அப்பால், நாம் உண்மையில் யார் என்று நமக்குத் தெரியுமா? நமது செயல்கள், பழக்க வழக்கங்கள், மதிப்புகள், சாதனைகள், தொழில்கள், உறவுகள் போன்றவை மட்டுமே நாம் யார் என்பதை வரையறுக்கின்றனவா? அல்லது, நமது பெயர் நமது இருப்பை மையப்படுத்தி நமது அடையாளத்தை பிரதிபலிக்கின்றனவா? நம் தந்தையாகிய இறைவனின் பெயரான 'இருக்கின்றவர் நானே' என்பது அவருடைய இருப்பைக் குறிக்கிறது. ஏனென்றால், அவர் வரலாற்றில் மட்டுமல்ல, நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் நிலையாய் இருப்பவர். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர், எப்போதும் நம்மோடு இருக்கிறவர்.

இப்படிப்பட்ட அன்புக்கு நம் பதில்மொழி என்ன? நல்லதொரு மனநிறைவோடு இந்த அன்பான இறைவனோடு நாம் உறவாட விரும்புகிறோமா? அல்லது, நாம் தற்பெருமையோடு இப்போது நீர் எனக்குத் தேவையில்லை, நீர் என்னை அன்பு செய்யும் விதம் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்கிறோமா?

இன்றைய நமது வாசகங்கள் நம் மனதை மாற்றவும் (மனந்திரும்புதல்), தாழ்ச்சியோடு பெருமைமிக்க சுய~விருப்பமுள்ள நம் இதயத்தைத் தூய்மைப்படுத்தவும் அழைத்து, நம் ஆன்மாவை ஆழமாகத் தோண்டி, இரக்கமுள்ள விதைகளை விதைத்து, அன்பைப் புதுப்பித்து வளர்க்க நம் தோட்டக்காரரை அனுமதிக்கிறது. தவக்காலம் என்பது மனந்திரும்புதலுக்கான ஒரு அர்த்தமுள்ள பருவகாலம். நம் இதயங்களை நம் தந்தையாகிய இறைவனிடம் திருப்பி, அவருக்கென ஒரு இடத்தை உருவாக்குகிறது. அப்போதுதான் வசந்த காலமாகிய இந்தத் தவக்காலம் உண்மையிலேயே நமக்கானதாக இருக்க முடியும். வார்த்தையால் நம் மனம் மாற்றப்பட்டு, அருள் நிறைந்த வாழ்வை நோக்கி நம்மை வழிநடத்தக் கூடியப் புதுப்பித்தலையும் தரும் காலமாக இருக்கும்.

## சிந்திப்போம்

### பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இறைவார்த்தைப் பகுதியில் எது உங்கள் மனதைத் தொட்டது? கீழுள்ளக் கேள்விகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள். நீங்கள் குழுவாக இருந்தால் இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

நம் தந்தையாகிய இறைவன் நமக்கு நிறைவாழ்வை வாக்களித்துள்ளார். நமது உள்ளத்தையும் மனதையும் மாற்ற அவரது வார்த்தைக்கு நாம் அனுமதி அளித்தால் மட்டுமே இது சாத்தியம். இதுவே உண்மையான மனமாற்றம். இந்த அழைப்பிற்கு நான் எவ்வாறு பதிலளிப்பேன்?

### துணைக் கேள்விகள்:

*உங்கள் குழுவின் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்து, சிறிது நேரம் ஒதுக்கி இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

### அன்பியங்களுக்காக:

நாம் மனமாற்றத்தின் அவசியத்தை உணராத நம் சமூகத்தில் வாழப் பழகிவிட்டோமா? இயேசு கிறிஸ்துவில் மிகவும் ஒன்றித்து வாழ நமது சமூக வாழ்வின் எந்தக் குறிப்பிட்டப் பகுதியில் மனமாற்றம் தேவை? மனந்திரும்பவும் இறைவனுக்காக நமது இதயங்களில் இடம் ஒதுக்கவும் நாம் ஒருவரையொருவர், ஒரே சமூகமாக, எவ்வாறு ஊக்குவிக்க முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

நமது பணிக்குழுக் கூட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் இறை பிரசன்னத்தை நாம் எவ்வாறு அனுமதிப்பது? பாலைவனம் வழியாக இஸ்ரயேலரை வழிநடத்திய மேகத்தூண் போலவும், நெருப்புத்தூண் போலவும், நம் தந்தையாகிய இறைவனின் வார்த்தை வழியாக அவர் நம்மை வழிநடத்தவும் வழிகாட்டவும் நாம் அனுமதிக்கிறோமா?

### குடும்பங்களுக்காக:

எனது குடும்பத்தினர்கள் நற்பண்புகளின் கனிகளைக் கொடுக்க அவர்களுக்கு மேலும் ஒரு வருடம் அவகாசமளிக்க எனக்கு அந்தத் தோட்டக்காரரின் இரக்கமுள்ள இதயம் உள்ளதா? எனது குடும்ப உறுப்பினர்கள் பெற்ற மனமாற்றத்திற்கு இறைவார்த்தை தான் காரணமா? எனது குடும்ப உறுப்பினர்களுக்கு நான் இறைவார்த்தையை வழங்குகிறேனா?

## நம் வாழ்விற்காக

நம் தந்தையாகிய இறைவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தி, அவருடைய ஞானத்தால் நம்மைத் தூய்மைப்படுத்தவும் வழிநடத்தவும் ஒரு தாழ்மையான இதயம் மட்டுமே அனுமதிக்கும்.

## நற்செயல் புரிவோம்

தங்களது வாழ்வில் சில சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ளும் உங்களுக்குத் தெரிந்தவர்களுக்காகச் செபியுங்கள்.

# தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## இறுதி செபம்

எல்லாம் வல்ல இறைவா,

நாங்கள் நிறைவாழ்வை பெறுவதற்காக நீர் எங்களுக்கு உமது வார்த்தையை அளித்தீர். இந்த வார்த்தையை நாங்கள் செயல்களால் ஏற்றுக்கொள்வதன் வழியாக நீர் வழங்கிய வாழ்வை நாங்கள் முழுமையாக வாழ முடியும். இந்தத் தவக்காலத்தில், நாங்கள் உமது வார்த்தைக்குச் செவிகொடுத்து, நீர் எதிர்பார்க்கும் மனமாற்றத்தை உமது வார்த்தை எங்களுக்குள் நிறைவேற்ற அருள் தாரும். உமது வார்த்தைளை வாழ்வாக்குவதால் நாங்கள் பெறும் விசுவாசம் மற்றவர் மனமாற்றம் அடையத் தூண்டுவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.



# வார்த்தையால் மனமாற்றமடைதல்

# உங்கள் கருத்து எங்களுக்குத் தேவை

இதுவரை இந்தக் கையேட்டைப் பயன்படுத்தியமைக்கு நன்றி!
இந்தக் கையேட்டைப் பயன்படுத்த எளிதாக இருந்ததா?
உங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம்.
உங்கள் அனுபவத்தை எது சிறப்பாக்கியது?
எதை இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடியும்?
அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்! நன்றி.

Scan me

**one.org.sg/feedback**

## தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

# வார்த்தையில் உயிரோடிருத்தல்

### தொடக்கச் செபம்

விண்ணகத் தந்தையே இறைவா,

உமது அன்புப் பிள்ளைகளாக நீர் எங்களை அன்பு செய்வதால் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்மை நோக்கியப் பயணத்தில் எங்களது பாதுகாவலராகவும், தலைவராகவும், மீட்பராகவும், குணமளிப்பவராகவும் உமது ஒரே பேறான மகன் இயேசுவை எங்களுக்குத் தந்தீர். எங்கள் நம்பிக்கையின் பள்ளத்தாக்குகள் மற்றும் மேடுகள் வழியாக நாங்கள் நடக்கும் போது, உமது வார்த்தை எங்கள் வாழ்வில் எவ்வளவு உயிரோடு இருக்கிறது என்பதை உணரவும் புரிந்து கொள்ளவும், எங்களுக்காக உமது அளவற்ற அன்பின் அற்புதங்களை அனுபவிக்கத் தொடங்கவும் எங்களுக்கு தொடர்ந்து உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம். அன்புத் தந்தையே, உமது உயிருள்ள வார்த்தையால் தவக்காலத்தில் மிகவும் முக்கியமான உமது மறுமலர்ச்சி, புதுப்பித்தல், ஒப்புரவு பற்றிய நற்செய்தியை நாங்கள் உணரச் செய்தருளும்.

ஆமென்.

## இறைவார்த்தை

### முதல் வாசகம்: யோசுவா 5:9–12

இஸ்ரயேலருக்கும் நம் தந்தையாகிய இறைவனுக்கும் இடையிலான உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறி ஒரு தலைமுறையாகிவிட்டது. எனவே, விருத்தசேதனச் சடங்கு முடிந்ததும், புதிய தலைமுறையால் இனி பாஸ்கா விழாவைக் கொண்டாட முடியும். இது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மக்களின் வாழ்வில் ஒரு முக்கிய நிகழ்வாகும். நம் தந்தையாகிய இறைவனுடைய மீட்பின் வாக்குறுதியை உறுதிப்படுத்தி, அவர் தேர்ந்தெடுத்த மக்களுடன் அவர் வைத்திருக்கும் சிறப்பு உறவைப் புதுப்பிப்பதே திருமுழுக்கின் முன்னோடியான இப்பாஸ்கா கொண்டாட்டத்தின் முக்கிய அம்சம். அவர்களுடனான இந்த உடன்படிக்கை, வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் நுழைவதுடன் முடிந்துவிடாமல், அவர்களுடைய நிறைவாழ்வை நோக்கித் தொடர்கிறது. அவர்களிடமிருக்கும் அனைத்தும் நம் தந்தையாகிய இறைவனிடமிருந்து வந்தவை. அவர் தனது பிள்ளைகள் நிறைவாழ்வை அனுபவிக்க வேண்டும் என்றே விரும்புகிறார். இஸ்ரயேலர் மன்னாவை உண்பதிலிருந்து நிலத்தின் விளைச்சலை உண்பதற்கு மாறும் இந்தத் தருணத்தில், மக்களை எப்போதும் சிறந்தவற்றிற்கு வழிநடத்தும் நம் தந்தையாகிய இறைவனில் மட்டுமே இந்த நிறைவாழ்வின் திறன் உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து பின்பற்றினால் மட்டுமே அவர்களுக்கு நல்லது.

### இரண்டாம் வாசகம்: 2 கொரிந்தியர் 5:17–21

அனைத்துக் கட்டுகளிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட்ட இயேசு கிறிஸ்துவின் வாழ்வினுள் நுழைவதே திருமுழுக்காகும். மாந்தர் அனைவருமே பெற வேண்டும் என்று நம் தந்தையாகிய இறைவன் விரும்பும் நிறைவாழ்வு இது. நாம் இருப்பதைப் போலவே, நமது பழையப் பாவச் சேற்றிலிருந்து இயேசு கிறிஸ்து நம்மை தூக்கியெடுத்து, கழுவி, குணப்படுத்தி, பரிபூரணமாக்கி, நம் தந்தையாகிய இறைவனுடன் சரியான உறவுக்கு நம்மை மீண்டும் உயர்த்துகிறார். இதுவே திருத்தூதர்கள் முதல் தொடங்கி அவரை நம்பும் அனைவருக்கும் தொடரும் இயேசு கிறிஸ்துவின் புதுப்பிக்கும் ஒப்புரவுப் பணி. திருமுழுக்கினால், நாம் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு ‘புதுப் படைப்பாக’ மாறி, மனிதகுலம் முழுவதும் மீட்டெடுக்கப்படவும், நம் தந்தையாகிய இறைவனுடன் சரியான உறவில் சமரசமாகி, அவரது அரவணைப்பில் ஆழ்ந்திருக்கவும் வேண்டும் என்பதே நம் தந்தையாகிய இறைவனின் ஆழ்ந்த விருப்பம் என்ற நற்செய்தியை எடுத்துச் செல்வதற்கான தூதர்களாக நாம் மாறுகிறோம்.

## நற்செய்தி வாசகம்: லூக்கா 15:1–3, 11–32

இந்த உவமையின் கவனம் அந்தப் புதல்வர்கள் மீது அல்ல. ஆனால், இளையவனின் விலகலிலிருந்தும், மூத்தவனின் ஒட்டுறவின்மையிலிருந்தும், தனது குடும்பத்தை மீட்டெடுக்க முற்படும் ஒரு தந்தையைப் பற்றியது. இயேசு தனது தந்தையின் நிபந்தனையற்ற அன்பை இங்கே வெளிப்படுத்துகிறார். நம் தந்தையாகிய இறைவன், அன்பினால் நம்மைச் சுதந்திரமாக உருவாக்கி, நமக்கென ஒரு சித்தத்தை வழங்கி, நாம் அவரை விட்டு விலகிச் செல்லும் போது நம்மை அணுகி, நாம் திரும்பி வரும் போது அக்களித்து மகிழ்கிறார். இந்த இரு புதல்வர்களும் இறைவனுடன் உறவு கொள்வதற்கான இரு முதிர்ச்சியற்ற வழிகளை வெளிப்படுத்துகிறார்கள்: ஒன்று கிளர்ச்சி, அடுத்தது குழந்தைத்தனமானக் கீழ்ப்படிதல். இந்த வழிகள் இரண்டும் இரக்கத்தின் அனுபவத்தால் இங்கு எதிர்கொள்ளப்படுகின்றன. மன்னிப்பை அனுபவிப்பதாலும், கொடையாக பெற்ற அன்பினால் உண்மையாக நாம் அன்பு செய்யப்படுகிறோம் என்பதை அங்கீகரிப்பதாலும் மட்டுமே, நமது அவல நிலையை விட, நமது தகுதியை விட மேலான இந்த அன்பை நாம் உணர முடியும். அப்படி உணர்ந்தால், நம் தந்தையான இறைவனின் உண்மைப் பிள்ளைகளாக, ஒரு சுதந்திரமான உறவில் இணைந்து, அவருடைய அன்புப் பிள்ளைகளாக நாம் முழுமையாக வாழ முடியும்.



## தியானிப்போம்

'மனிதனை முழுமையாக வாழ்விப்பது இறைவனின் மாட்சியே' என்று தூய இரேனியஸ் எழுதுகிறார். நம் தந்தையாகிய இறைவனின் பார்வையில், நாம் நிறைவாழ்வு வாழ வேண்டும் என்பதையே அவரும் விரும்புகிறார். அப்படியென்றால், அவருடைய விருப்பத்திற்கு நாம் இணங்க வேண்டும். எல்லாப் படைப்புகளும் தன்னோடும் பிறரோடும் சரியான உறவில் நிலைக்க வேண்டும் என்றே நம் தந்தையாகிய இறைவன் விரும்புகிறார். இஸ்ரயேலர் முதல், அவருடைய மீட்புத் திட்டம் ஒரு தெளிவான செய்தியுடன் வெளிப்பட்டது. படைப்புகளாகிய நாம் அனைவரும் அவர் ஒருவரையே ஆண்டவர் என நமது வாழ்வில் ஏற்று வாழ வேண்டும். இதன்படி, இயேசு கிறிஸ்து வழியாக மட்டுமே நாம் நிறைவாழ்வு பெற்று, தந்தையோடும் தூய ஆவியாரோடும் நம்மை இணைத்துக் கொள்ள முடியும். இதைத் தவிர, நம் தந்தையாகிய இறைவன் விரும்பும் நிறைவாழ்விலிருந்து நாம் வெகுதொலைவில் இருக்கிறோம்.

காணாமல் போன மகனின் உவமையில் இது விளக்கப்படுவதைக் காணலாம். தந்தையின் பரம்பரைச் சொத்திலிருந்து தனக்குரியப் பங்கை இளைய மகன் கேட்பதன் வழியாக, தனது தந்தையின் இறப்பையே அவன் விரும்புகிறான். ஏனென்றால், யூதரின் வழக்கப்படி சொத்தில் பங்கு கேட்பது ஒரு நபரின் வாழ்வின் ஒரு பகுதியைக் கேட்பதற்குச் சமம். மேலும் அவன் தந்தையின் அன்பிலிருந்து விலகி உலக வழிகளுக்கு ஏற்ப தன் வாழ்வை வாழ விரும்புவது வாழ்வதை விடச் சாவதற்குச் சமம். மறுபுறம், மூத்த மகன் தந்தையோடு வீட்டிலிருந்த போதிலும், தந்தையின் அன்புக்குப் பிரமாணிக்கமாக இல்லை. அவன் தான் செய்தவற்றைத் தன் வேலையாகவும் கடமையாகவும் கருதினாரே தவிர, தந்தை என்றப் பாசத்தாலும் அன்பினாலும் அல்ல. தந்தை தனது இரு மகன்களையும் மீண்டும் உயிர் பெற அழைத்து, அவர்களுக்கு ஒப்புரவளித்து, தன்னோடுள்ள உறவைச் சரிசெய்ய வாய்ப்பளித்தார்.

நம் தந்தையாகிய இறைவனுடன் நம்மைச் சமரசம் செய்ய, இயேசு கிறிஸ்து தன் இறப்பாலும் உயிர்ப்பாலும் அனைத்து மனித குலத்துடன் ஒரு உறவை உருவாக்குவதற்கான உரிமை வழங்கப்பட்டது எனக் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் வாசிக்கிறோம். திருமுழுக்கினால், கிறிஸ்துவின் வாழ்வால் நாம் மீட்கப்பட்டுப் புதுப்படைப்பாகவும் புத்துயிர் பெற்றவர்களாகவும் உள்ளோம். இஸ்ரயேலர் அனைவரும் தன்னோடு உறவில் உயிருடன் இருக்க வேண்டும் என்று நம் தந்தையாகிய இறைவன் விரும்பியதைப் போலவே, இந்த ஒப்புரவுச் செய்தி இன்றும் நமக்குப் பொருத்தமாக இருப்பாதால், இதை நாம் அனைவருக்கும் கொண்டு செல்ல வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் நாம் தவக்காலத்தில் பயணிக்கும்போது, கிறிஸ்துவில் நிறைவாழ்வு பெற நாம் நம் சுயத்தில் இறக்க நினைவூட்டப்படுகிறோம். நாம் மூவொரு இறைவனுடன் உயிருடன் இருப்பது இறைவார்த்தையுடன் உள்ள உறவில் தொடங்கி, அவ்வார்த்தை நம் வாழ்வில், முடிவெடுத்தலில், சவால்களில், மகிழ்ச்சியில், இதயமாக இருக்க வேண்டும். இல்லையேல் நமது வாழ்வு உயிரற்றது, மலட்டுத்தனமானது.

## சிந்திப்போம்

### பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இறைவார்த்தைப் பகுதியில் எது உங்கள் மனதைத் தொட்டது? கீழுள்ளக் கேள்விகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள். நீங்கள் குழுவாக இருந்தால் இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

இயேசு கிறிஸ்துவோடும் நம் தந்தையாகிய இறைவனோடும் உள்ள உறவில் நான் உயிரோடிருக்கிறேனா? இயேசு கிறிஸ்துவுடனான இந்த உறவுக்கு நான் அடிபணியாமல் என்னை நான் கட்டுப்படுத்துவதால், என் வாழ்வில் உயிரற்றப் பகுதிகள் இருக்கிறதா?

### துணைக் கேள்விகள்:

*உங்கள் குழுவின் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்து, சிறிது நேரம் ஒதுக்கி இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

### அன்பியங்களுக்காக:

மன்னிப்பதால் மட்டுமே சமூகத்தின் மேலுள்ள அன்பு வெளிப்படுகிறது. உங்கள் சமூகத்தில் கடைசியாக எப்போது ஒப்புரவுப் பணி நடைபெற்றது? நமக்கிடையே மறைமுகமான எதாவது மனக்கசப்புகளும் வெறுப்புகளும் உள்ளதா?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

அதிருப்தியும் பொறாமையும் பெரும்பாலும் எல்லாப் பணிக்குழுக்களின் ஒற்றுமையை அழிக்கிறது. நமது செயல்களும், நாம் எடுக்கும் முடிவுகளும் இறைவார்த்தையின் அடிப்படையிலானதா? இறைவார்த்தையில் நம் (இறைவார்த்தையால் ஈர்க்கப்பட்டு செயல்படுகிறார்கள் அல்லது பேசுகிறார்கள்) பணிக்குழு உறுப்பினர்கள் எவ்வளவு உயிரோடுள்ளார்கள்?

### குடும்பங்களுக்காக:

நம் குடும்பத்தில் இறைவனோடும் ஒருவருக்கொருவரோடும் உள்ள உறவில் ஏற்றத்தாழ்வு உள்ள பகுதிகள் என்ன? சரியான உறவைப் பேணிக்காக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

## நம் வாழ்விற்காக

நம் தந்தையாகிய இறைவனின் அன்பு எல்லையற்றது, நிபந்தனையற்றது. அவரது இரக்கம் நமது பாவ இயல்புக்கு அப்பாற்பட்டது. அவர் எப்பொழுதும் நம்மோடு இருக்கிறார். நம் தேவைகளை அவரே அவர் வழியில் நிறைவேற்றுவார்.

## நற்செயல் புரிவோம்

நீங்கள் செபிக்கும் நபரைச் சந்தித்து, அவரது வாழ்வு எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றி ஒரு உரையாடலைத் தொடங்குங்கள். இந்த கட்டத்தில் எந்த ஆலோசனையும் வழங்காமல் அமைதியாகக் கேளுங்கள். இறுதியில், அந்த நபரின் வசதிப்படி ஒரு செபத்துடன் முடியுங்கள். எப்படி செபிப்பது என்று தெரியாவிட்டால், கர்த்தர் கற்பித்த செபத்தை சொல்லுங்கள். நீங்கள் தனித்திருக்கும்போது, வாழ்வில் கடினமான, சவாலான சூழலில் உள்ள அந்த நபருக்காக சிறப்பாகச் செபியுங்கள்.

## இறுதி செபம்

என்றும் அன்பான இரக்கமுள்ள தந்தையே,

நாங்கள் நிறைவாழ்வு பெறுவதையே நீர் விரும்புகிறீர், இதற்காகவே நீர் இயேசுவை அனுப்பினீர். உமது வார்த்தையை வாழ்வதால் மட்டுமே இந்த நிறைவாழ்வு சாத்தியம் என நாங்கள் அறிவோம். இந்த தவக்கால சிந்தனையில் உமது வார்த்தையை வாசித்துச் சிந்திப்பதன் வழியாக எங்களது அன்றாட வாழ்வில் உம்மை மகிமைப்படுத்த வேண்டும் என்று இயேசு விரும்புவதைப் போல, முழுமையாக வாழந்து உமது வார்த்தையில் உயிருடன் இருக்க ஆசைப்படுகிறோம். இவ்வாறு வாழ்வதால், மனிதகுலத்திற்கான உமது அன்பின் மறைபொருளை அறிய மற்றவர்களுக் ஊக்கமளிப்பதாக. நிச்சயமற்ற இந்தக் காலக்கட்டத்தில், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக தங்களின் வாழ்வில் அமைதியையும் அர்த்தத்தையும் தேடும் அனைவருக்கும் உமது வார்த்தை ஒரு துறைமுகமாக இருப்பதாக.

ஆமென்.



# வார்த்தையில் உயிரோடிருத்தல்


# வார்த்தையில் வேரூன்றல்

## தொடக்கச் செபம்

விண்ணகத் தந்தையே இறைவா,

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறை நாங்கள் கொண்டாடும் போது, உமது வார்த்தையின் வல்லமை எங்கள் பயணத்தில் அதிகமாக வெளிப்படுகிறது. இந்த நம்பிக்கை மற்றும் வாழ்வின் பயணத்தில் வழிதவறியவர்களுக்காகவும் சோர்ந்துபோனவர்களுக்காகவும் நீர் கொண்டுள்ள அக்கறையைப் பற்றி வாசிக்கும்போது, உமது வார்த்தை எங்கள் இதயங்களில் ஆழமாக வேரூன்றுவதாக. தவறான எதிர்நோக்குகள், கொள்கைகள், இலட்சியங்கள் போன்றவற்றிலிருந்து எங்களை விடுவிக்க உமது வார்த்தை உதவுவதாக. உமது வழிகளில் நாங்கள் உண்மையாகப் போராடும் போது அது எங்களைத் தொடர்ந்து புதுப்பிப்பதாக. உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்துவே எங்களது ஒரே வழி, உண்மை, வாழ்வு. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.



## இறைவார்த்தை

### முதல் வாசகம்: எசாயா 43:16–21

யூதர்கள் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டதன் (கிமு 597-539) முடிவில் இப்பகுதி எழுதப்பட்டது. பாபிலோனிய மன்னர் இரண்டாம் நெபுகத்னேசர் யூதர்களைச் சிறைப்பிடித்து, அவர்களை அவர்களது நாட்டிலிருந்து வெளியேற்றி, தனது நாட்டுக்குக் கடத்தினார். இது பெரும்பாலும் யூதர்களின் உருவ வழிபாட்டுக்கும் கீழ்ப்படியாமைக்குமானத் தெய்வீக தண்டனையாக விளக்கப்படுகிறது. இருப்பினும், பாரசீக மாமன்னர் சைரசு பாபிலோனைக் கைப்பற்றியபோது, அவர் யூதர்களை விடுவித்து, அவர்கள் விரும்பியபடி வாழவும் வழிபடவும் அனுமதித்தார். நம் தந்தையாகிய இறைவன் சிறைபிடிக்கப்பட்ட யூதர்களுக்கு சுதந்திரத்தை அறிவித்து, அவர்களை எப்படி சொந்த நாட்டுக்கு அழைத்துச் செல்லப் போகிறார் என்பதை இந்தப் பகுதி விவரிக்கிறது. அவர் தனது மக்களை விடுவிப்பதற்கான வாக்குறுதியைப் புதுப்பிப்பதாக இங்கே காணலாம்: ‘முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள். முற்கால நிகழ்ச்சிகள் பற்றிச் சிந்திக்காதிருங்கள். இதோ புதுச் செயல் ஒன்றை நான் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றிவிட்டது’ (வச 18-19). பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து யூதர்களை விடுவித்ததைப் போலவே, அவர் அவர்களின் பாவங்களை மன்னிப்பார், அவர் இப்போது அவர்களின் செல்வங்களை மீட்டெடுப்பார், திரும்பிச் செல்லும் பயணத்திற்கு வழி வகுப்பார், பாலைவனத்தின் வனவிலங்குகளிடமிருந்து பாதுகாத்து, அவர்களுக்கு தண்ணீரும் உணவும் வழங்குவார். இதனால் அவர்கள் மீண்டும் ஒரே குலமாக அவரை வணங்க முடியும்.

### இரண்டாம் வாசகம்: பிலிப்பியர் 3:8–14

பிலிப்பியில் உள்ளக் கிறிஸ்தவர்களுக்குத் தூய பவுல் இதை எழுதிய போது கிறிஸ்துவைப் பற்றிப் போதித்ததற்காக அவர் சிறையில் இருந்தார். ஆயினும், இத்திருமுகம் ‘மகிழ்ச்சியின் திருமுகம்’ என அழைக்கப்படுகிறது. அவருடைய இருண்ட சூழ்நிலைக்கு மாறாகத் தூய பவுல், கிறிஸ்து இயேசுவை அறிந்த அனுபவத்தையும், அவருடனான ஒன்றிப்பை அடைய விரும்பும் அவரது ஆர்வத்தைப் பற்றியும் இங்கு மிகுந்த உற்சாகத்துடன் எழுதுகிறார். ஒருவரைப் புதுப்பிக்க இறைவார்த்தை எவ்வளவு வல்லமையானது என்பதை வல்லமையோடு இங்கு சித்தரிக்கிறார். தமஸ்கு நகர் செல்லும் வழியில் கிறிஸ்து தம்மைத் தனக்கு வெளிப்படுத்தியதிலிருந்து, கிறிஸ்துவைத் தனது இலக்காகத் தழுவி, தனது கடந்த காலத் தொடர்புகளை எவ்வாறு முறித்துக் கொண்டார் (வச 13) என்பதைத் தூய பவுல் விவரிக்கிறார். முன்னதாக, தூய பவுல் ஒரு பரிசேயர், திருச்சட்டத்தைக் கடுமையாகக் கடைப்பிடித்தவர், கிறிஸ்தவர்களை ஆர்வமாகத் துன்புறுத்தியவர், முன்னோர்களின் மரபுகளைக் கடைப்பிடிப்பதால் மட்டுமே மீட்படைய முடியும் என நம்பியவர். இருப்பினும், உயிர்த்த ஆண்டவரைப் பற்றிய அவரது அற்புதமான அனுபவம், ‘எல்லாவற்றையும் குப்பை’ என அவருக்கு உணர்த்தியது. திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதை விட, இயேசு கிறிஸ்து மீதுள்ள நம்பிக்கையால் இறைவனின் அருளில் வேரூன்றி இருப்பதன் முக்கியத்துவத்தை, (‘திருச்சட்டத்தின் அடிப்படையில் நான் கடவுளுக்கு ஏற்புடையவனாக இயலாது. கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால்தான் அவருக்கு நான் ஏற்புடையவன் ஆகமுடியும்.’) மன்னிக்கப்பட்டப் பாவியானத் தூய பவுல் இப்போது உணர்ந்திருக்கிறார். இயேசுவின் மீதுள்ள நம்பிக்கை வளர்வதையும், ‘கிறிஸ்து இயேசுவின் மூலம் இறைவன் மேலிருந்து விடுக்கும் அழைப்பின் பரிசை’ அடைவதற்கு முன்னேறுவதையும் தான் அவர் மீட்பு எனப் புரிந்து கொண்டார்.

## நற்செய்தி வாசகம்: யோவான் 8:1–11

இந்த நற்செய்தி வாசகத்தில், நீதியைப் பற்றிய மக்களின் புரிதலை இயேசு எவ்வாறு எதிர்கொள்கிறார் என்பதைக் காண்கிறோம். தெய்வீக நீதி என்பது சட்டத்தின் பழிவாங்கும் பயன்பாட்டைக் காட்டிலும், அன்பிலும் இரக்கத்திலும் வேரூன்றியது. இங்கு, மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண்ணை இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள். மோசேயின் சட்டப்படி, விபச்சாரம் செய்பவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்று அவள் மீது குற்றம் சாட்டுகிறார்கள். உரோமையர் ஆட்சியின் கீழ், தங்களுக்கு மரண தண்டனை விதிக்கும் அதிகாரமில்லை என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தும், என்ன செய்ய வேண்டும் என்பதற்கான பதிலைச் சொல்லும்படி அவர்கள் இயேசுவைக் கட்டாயப்படுத்தினர். அவர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்படி, இயேசு சட்டத்துக்கு மாறான அல்லது வேறொன்றுக்கு முரணான ஒரு செயலைப் பகிரங்கமாக முன்மொழிய வேண்டியக் கட்டாயம் ஏற்படும் என்பதை அவர்கள் தெளிவாக அறிந்திருந்தனர்.

இயேசுவோ மிக எளிமையாக, ஆனால் அதிகாரத்தோடு ‘உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்’ என்றார். ஒரே வேளையில், குற்றம் சாட்டியவர்களின் கவனத்தை இயேசு மீண்டும் அவர்கள் மீதே செலுத்தி, குற்றம் செய்த விபச்சாரியை விட அவர்கள் மேலானவர்கள் அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்துகிறார்.

இயேசுவின் அடிப்படையானக் கூற்றும், குற்றம் சாட்டியவர்கள் மிகவும் வெட்கத்துடன் செய்வதறியாது ஒவ்வொருவராகப் புறப்பட்ட விதமும், இறைவனின் சட்டத்தையும் இரக்கத்தையும் பற்றி இறைவார்த்தை எவ்வாறு வல்லமையோடு மக்களுக்கு அறிவூட்ட முடியும் என்பதைக் காட்டுகிறது. இறைவனின் கட்டளைகள் இரக்கமுள்ளவை என்றாலும், அவை நீதியில் வேரூன்றியுள்ளன. இயேசு அந்தப் பெண்ணை மன்னித்து, கண்டிக்கவில்லை என்றாலும், அவளது கடுமையான குற்றத்தை அலட்சியப் படுத்தாமல், ‘இனிமேல் பாவம் செய்யாதே’ என்று மிகத் தெளிவாகப் புரியம்படி அவளிடம் கூறுகிறார்.



## தியானிப்போம்

நம் தந்தையாகிய இறைவன் பாவிகளை மன்னித்து, அவர்கள் வாழ நினைக்கும் வாழ்வை வாழத் தனது நட்பால் புதுப்பிக்கிறார் என்பதே இன்றைய மூன்று வாசகங்களின் முக்கியக் கருப்பொருள். ஒருவர் இறைவார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருந்தால், அவர் யார் என்பதைப் பற்றிய மக்களின் புரிதலும், அவருடையப் பெருந்தன்மையான அன்பும் இரக்கமும் தொடர்ந்து புதுப்பிக்கப்படுவதை மூன்று வாசகங்களும் சுட்டிக்காட்டுகின்றன. சட்டங்களைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவருடைய வார்த்தையில் வேரூன்றியிருந்தால் அது நமது வாழ்க்கையின் தொலைநோக்குப் பார்வைக்கும் பணிகளுக்கும் தெளிவை அளிக்கும் என்பதையும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

இரக்கமுள்ள இறைவன் தாம் தேர்ந்தெடுத்த மக்களின் பாவங்களை மன்னித்து, பாபிலோனிய நாடுகடத்தலில் இருந்து அவர்களை எப்படித் திரும்ப அழைத்து வருகிறார் என்பதை இன்றைய முதல் வாசகம் விவரிக்கிறது. செங்கடலைப் பிரித்து, பாரவோனின் குதிரை வீரர்களை மூழ்கடித்து, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை எப்படி விடுவித்தார் என்பதைக் காட்டி, பல யுகங்கள் கடந்தாலும் அவருடைய நம்பகத்தன்மை நிலையானது என அவர்களுக்கு நினைவூட்டுகிறார். இப்போது அவர் 'புதிய ஒன்றைச்' செய்கிறார். அவர்களைத் தற்போதைய சிறையிலிருந்து வெளியே கொணர்ந்து, அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குச் செல்லும் வழியில் அவர்களுக்குத் தண்ணீரும் உணவும் அளித்துப் பாதுகாக்கிறார். இதனால் அவர்கள் மீண்டும் 'என்னைப் புகழ்ந்து' அவர் தேர்ந்தெடுத்த மக்களாக அறிவிக்க முடியும்.

இரண்டாம் வாசகத்தில், தூய பவுல் மன்னிக்கப்பட்டப் பாவியானத் தனது விழிப்புணர்வை முன்வைக்கிறார். அவர் இயேசுவின் மீதான நம்பிக்கையால் புதுப்பிக்கப்பட்டு மாற்றப்பட்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அனுபவிக்க, கிறிஸ்துவின் பாடுகளிலும், இறப்பிலும் பங்கு கொள்ள விரும்புவதாகவும், 'கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்றச் செல்வம்' என தூய பவுல் உறுதியாக நம்புகிறார். இறைவனின் அன்பில் அவர் புதிதாகக் கண்ட நம்பிக்கையில் வேரூன்றியிருப்பதே கிறிஸ்துவோடு ஒன்றித்தல் என்ற இலக்கை நோக்கி தொடர்ந்து ஓட அவரைத் தூண்டுகிறது.

அடுத்தப் பக்கத்தில் தொடரும் ...

முன் பக்கத்தின் தொடர்ச்சி ...

## தியானிப்போம்

விபச்சாரத்தில் பிடிபட்டப் பெண்ணைப் பற்றிய நற்செய்தி வாசகம், செய்யப்பட்டப் பாவமும் மன்னிக்கப்பட்டப் பாவமும் பற்றியக் கதை. மனந்திரும்பியப் பாவிகளுக்கு இயேசு கொடுக்கும் வற்றாத இரக்கத்தையும் பரிவையும் இது வெளிப்படுத்துகிறது. 'பாவமில்லா நிலையை' முதல் கல்லை எறிவதற்கான உரிமைக்குரிய நிபந்தனையாக உருவாக்கியதால், இறைவனின் சட்டம் எதைக் குறித்தது என்பதைப் பற்றிய நமது புரிதலை இயேசு புதுப்பிக்கிறார். நம்மைக் கண்டிக்காமல், இறைவனின் அருளுக்கான நமது தேவையை உணரச் செய்து நமது பாவத்தை நமக்கு உணர்த்துகிறார். இது குற்றம் சாட்டுபவர்களை அவர்களின் முகத்தில் அறைந்து அவர்களது சொந்தப் பாவ நிலையை மதிப்பிட அவர்களைக் கட்டாயப்படுத்துகிறது. இவ்வாறு அவர் மறைநூல் அறிஞர்களுக்கும் பரிசேயர்களுக்கும் அவர்களது சுயநீதியின் கடுமையைக் கண்டிக்கும் அதே வேளையில் பாவிகளுக்கு இரக்கம் காட்டுகிறார்.

இந்த மூன்று வாசகங்களும் இறைவனிடமிருந்து நாம் பெற்ற அதே இரக்கத்தை நம் அயலாருக்கும் காட்ட நமக்குச் சவால் விடுகின்றன. எனவே, இந்தத் தவக்காலத்தில் நாம் மன்னிக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து, நம் தந்தையாகிய இறைவனோடும் நம்மைச் சுற்றியுள்ளவர்களோடும் ஒப்புரவாக முனைவோம். மூன்று வாசகங்களும் இறைவனை நீடிய அன்பும் இரக்கமும் உடையவராகச் சித்தரிக்கின்றன. மேலும், நம் தந்தையாகிய இறைவன் நம்மை மனமாற்றத்திற்கு அழைக்கும்போது நாம் சுயநீதியுள்ளவராகவோ, பிறரைக் கடுமையாகத் தீர்ப்பளிப்பவராகாவோ இருக்கக்கூடாது என்றும் நினைவூட்டுகின்றன.

## சிந்திப்போம்

### பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இறைவார்த்தைப் பகுதியில் எது உங்கள் மனதைத் தொட்டது? கீழுள்ளக் கேள்விகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள். நீங்கள் குழுவாக இருந்தால் இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

எனது செயல்கள் இறைவார்த்தையில் வேரூன்றியுள்ளதா?
என் வாழ்வு பற்றியக் கவலைகளை இறைவார்த்தையால் தீர்க்க முற்படுகிறேனா?
என் வாழ்வில் யாரையாவது மன்னிக்கும்படி இறைவார்த்தை என்னைக் கண்டிக்கிறதா?

### துணைக் கேள்விகள்:

*உங்கள் குழுவின் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்து, சிறிது நேரம் ஒதுக்கி இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

### அன்பியங்களுக்காக:

நாம் இறைவார்த்தையை வாசிப்பதிலும், சிந்திப்பதிலும், அதில் நிலைத்திருப்பதிலும் நமது நேரத்தைச் செலவிடுகிறோமா? இறைவனுடைய இரக்கமுள்ள அன்பைப் பற்றிய நமது புரிதலையும் போற்றுதலையும் புதுப்பிக்க இது நமக்கு உதவியிருக்கிறதா? நாம் பிறரைத் தீர்ப்பிடுகிறோமா? எந்த வழிகளில்? ஒரு சமூகமாக நாம் இதை எப்படி நிறுத்துவது?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

பணிக்குழுவின் நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், வழிகாட்டுதல்கள் இறைவார்த்தையில் வேரூன்றியுள்ளதா? இறைவார்த்தையில் காணப்படும் நீதி, அன்பு, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் நமது செயல்களும் வார்த்தைகளும் வேரூன்றியுள்ளதா?

### குடும்பங்களுக்காக:

குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுக்கும் முன் நம் குடும்பம் இறைவார்த்தையை நாடுகிறதா? நம் குடும்பத்தினரையோ மற்றவர்களையோ தீர்ப்பிடும் முன் நம் குடும்பம் இறைவார்த்தையை நாடுகிறதா? நம் வாழ்வின் முக்கியமானத் தருணங்களில் இறைவார்த்தையில் காணப்படும் ஞானத்தை நம் குடும்பம் நாடுகிறதா?

## நம் வாழ்விற்காக

**அவருடைய வார்த்தையில் மட்டுமே நீங்கள் மன்னிப்பையும் நிறைவாழ்வையும் காண்பீர்கள்.**

## நற்செயல் புரிவோம்

நீங்கள் செபித்துக் கொண்டிருக்கும் நபரைச் சந்தித்து அவர்களது சூழ்நிலைகள் மேம்பட்டுள்ளதா அல்லது அப்படியே உள்ளதா எனக் கேட்டறியுங்கள். கவனமாகக் கேட்ட பின், அவருக்கு உதவியாக இருக்கும் என நீங்கள் நினைக்கும் விவிலிய வசனம் ஒன்றை அவருக்குக் கொடுங்கள். உங்களுக்குள் எந்த வித ஆட்சேபனையும் இல்லையென்றால் திருப்பாடல் 23ஐ (பக்கம் 75) ஒன்றாகச் செபித்து உரையாடலை முடிக்கவும். நீங்கள் தனித்திருக்கும்போது, வாழ்வில் கடினமான, சவாலான சூழலில் உள்ள இந்த நபருக்காக தொடர்ந்து செபியுங்கள்.



# தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

## இறுதி செபம்

விண்ணகத் தந்தையே இறைவா,

உமது வார்த்தை என்றும் விவரிக்க முடியாத அன்பாலும் இரக்கத்தாலும் தொடர்ந்து எங்களைப் புதுப்பித்து ஆச்சரியப்படுத்துகிறது. நாங்கள் நீதியைத் தேடும் போது, அது உமது வார்த்தையில் வேரூன்றப்பட்டு, மற்றவர்கள் அதைப் பெறுவதற்கு எங்களை அன்பான முறையில் தயாரித்து, அவர்களை உம்மோடு நெருக்கமாக இழுக்கும் மனமாற்றத்தை எங்களுள் உருவாக்கியருளும். இந்தத் தவக்காலத்தில் நாங்கள் உமது வார்த்தையில் ஆழமாக வேரூன்றி, உம்மோடும் மற்றவர்களோடும், நீதியோடு நடந்து, கனிவோடு அன்பு செய்து, பணிவோடு நடக்க உதவும் காலமாக அமைவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.




# வார்த்தையில் வேரூன்றல்

# வாழும் வார்த்தைக்குள் ஒரு திருப்பயணம்

## தொடக்கச் செபம்

எல்லா மனித ஞானத்திற்கும் அப்பாற்பட்ட
எங்கள் தந்தையாகிய இறைவனே, உமது இதயம்
எல்லா மக்களையும், குறிப்பாக தாழ்த்தப்பட்டோரையும்,
ஏழைகளையும், ஒதுக்கப்பட்டவர்களையும்
அரவணைத்துச் செல்கிறது என்பதை உமது திருமகன்
இயேசு வழியாக எங்களுக்குக் காட்டியுள்ளீர்.
இறைவார்த்தையை நாங்கள் வாசிக்கவும்,
சிந்திக்கவும், வாசித்ததையும் கேட்டதையும் நினைவில்
வைத்துக்கொள்ளவும் நேரத்தைச் செலவிடும்போது,
அது உயிருள்ளதாகவும் ஆற்றல் மிக்கதாகவும்
இருப்பதை உணர வைத்ததற்காக உமக்கு நன்றி.
உமது உயிருள்ள வார்த்தை இல்லாமல்
உண்மையான வாழ்வு இல்லை. உமது அருளால்
மட்டுமே நாங்கள் உமது வார்த்தையைப் பின்பற்ற
முடியும். இங்கு இப்போது உமது உயிருள்ள
வார்த்தை முன் வருவதால், உமது அருளை
எங்களுக்குப் பொழிந்தருளும். ஒரு நாள் உம்மை
நேருக்கு நேர் காணும் நம்பிக்கையில் புனிதத்தை
நோக்கி உமது பாதையில் நடக்கும்போது,
எங்களின் சுயநலத்தை வெல்வதற்கான அருளை
அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.
ஆமென்.



## இறைவார்த்தை

### பவனி வாசகம்: லூக்கா 19:28–40

இயேசுவின் அரசாட்சி பற்றி ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், இயேசு எருசலேமுக்குள் நுழைந்ததைப் பற்றிய தனது குறிப்பில் நற்செய்தியாளர் அது பற்றிக் குறிப்பிடுகிறார். நான்கு நற்செய்தி நூல்களிலும் காணப்படும் இந்தப் பகுதி, புனித நகரத்திற்குள் வரலாற்று இயேசுவின் அடையாள நுழைவுக்குச் சான்றளிக்கிறது. தாவீதின் கோவேறு கழுதையின் மேல் சாலமோன் அமர்ந்து சென்றதை நினைவூட்டும் (1 அரசர்கள் 1:38-40) இந்த நிகழ்வு, லூக்காவின் மனதில் இயேசுவின் அரச அடையாளத்திற்கு எவ்வித ஐயமும் அளிக்கவில்லை. மனித உதடுகள் அறிக்கையிடாவிட்டாலும் இயற்கையே உண்மையைப் பறைசாற்றும் ~ 'கற்களே கத்தும்' (வச. 40). தங்களது அரசர் அவர்களுக்காக தனது சொந்த உயிரையேத் தியாகம் செய்வார் என்பதை அறியாத மக்கள் தங்கள் அரசருக்காகத் தங்கள் மேலாடைகளை வழியில் விரித்து அவரை வரவேற்றார்கள்.

### முதல் வாசகம்: எசாயா 50:4–7

இறைவாக்கினர் எசாயாவின் எழுத்துக்களில் நம் தந்தையாகிய இறைவனின் நீதிமான் ஒரு 'துன்புறும் ஊழியராகச்' சித்தரிக்கப்பட்டுள்ளார். துன்புறும் ஊழியரின் உருவம் உண்மையான விடாமுயற்சியைக் குறிக்கிறது. மேலும், கடவுளைப் பின்பற்ற விரும்புபவர்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் எதிர்ப்பையும் குறிக்கிறது. வெளியாட்களிடமிருந்தும் அவருடைய செய்தியைப் பெற வேண்டியவர்களிடமிருந்தும் விரோதத்தையும் நிராகரிப்பையும் அனுபவிக்கும் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் இது பொருந்தும். துன்புறும் ஊழியர் வற்புறுத்தலின் போது வெளிப்புற ஆறுதல்களைத் தேடுவதில்லை, தங்களுக்கு வசதியையும் பாதுகாப்பையும் தரும் உடைமைகளையும் நம்புவதில்லை. கடவுள் மட்டுமே அவர்களது வலிமையின் ஒரே ஆதாரம். கடவுளின் வல்லமையால் நிரப்பப்பட்டு, நிலையான வெகுமதியில் நம்பிக்கை கொண்ட துன்புறும் ஊழியர், உலகம் சார்ந்த எல்லா துன்பங்களையும் தாங்கிக் கொள்ளத் தனது 'முகத்தைக் கற்பாறையாக' மாற்றிக் கொள்கிறார்.

### இரண்டாம் வாசகம்: பிலிப்பியர் 2:6–11

கிறிஸ்துவுக்கான இந்தப் பாடல் தூய பவுலின் எழுத்துக்களுக்கு முந்தியது என்பதை விவிலிய அறிஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். தொடக்கக்கால கிறிஸ்தவர்களில் கணிசமான பகுதியினர் மட்டுமே மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு நைசியா சபையில் உறுதிப்படுத்தப்பட்டதை ஏற்கனவே நம்பினர் ~ பாடுகள் பட்டு உயிர்த்தெழுந்த இயேசு ஒரு தெய்வீக தன்மையைப் பெற்றிருந்தார். தூய பவுல் இந்தப் பழங்காலக் கவிதையை தனது சிறையிருப்பின் போது எழுதப்பட்ட இந்தத் திருமுகத்தில் பயன்படுத்தி, இறைவனின் திருமகனான கிறிஸ்துவில் தனது சொந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், சிலுவையை எதிர்கொண்ட இயேசுவின் கீழ்ப்படிதலுடன் தனது சொந்த சிறைவாசத்தையும் இணைத்தார். தனக்கு விண்ணக மகிமையை வாக்களித்த இறைவனின் திருமகனின் தியாகத்தில் பங்கு கொண்டவராகக் கண்ட தூய பவுல் தன்னையே வெறுமையாக்கிப் பதிலளித்தார். துன்பங்களை எதிர்கொண்டாலும் அதே மனப்பான்மையை வெளிப்படுத்துமாறு பிலிப்பி சமூகத்தை அவர் கேட்டுக் கொண்டார்.

## நற்செய்தி வாசகம்: லூக்கா 22:14 – 23:56

லூக்கா பெரும்பாலும் கிரேக்க மொழி பேசுவோருக்காக எழுதினார். எனவே, அது யூதக் கலாச்சாரத்திற்கும் உணர்ச்சிகளுக்கும் இசைவாக அமையவில்லை. எனவே, லூக்காவின் நற்செய்தி, கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பிற இனத்தாருக்கு ஏற்றதாகவும், இயேசுவை அறியாதோருக்கு ஒரு நல்ல அறிமுக நூலாகவும் அமைந்தது. இவர் இயேசுவின் போதனைகளின் முக்கியச் செய்திகளை 'பாடுகளின் கதையோடு' இணைக்க மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்:

1. தாழ்மையான முறையில் ஒரு அரசர் எருசலேமுக்குள் நுழைவது, நம் தந்தையாகிய இறைவனின் பார்வையில், பெரியவரே மிகவும் தாழ்மையானவர்.
2. மனுமகன் 'உங்களோடு இருந்து உங்களுக்குப் பணியாற்றுகிறார்'.
3. இறைவனின் வாக்குறுதி அவருக்கு அடிபணிவதாலும் கீழ்ப்படிவதாலும் அன்றி, ஒருபோதும் வாளின் வன்முறையால் அடையப்படுவதில்லை.

இயேசு தனது எல்லா பாடுகளிலும் இறப்பிலும் எசாயா காட்டிய 'துன்புறும் ஊழியரின்' உருவத்தை முழுமையாக நிறைவேற்றினார்.



# வாழும் வார்த்தைக்குள்
## ஒரு திருப்பயணம்

### தியானிப்போம்

நற்செய்தி நூல்களில் இழைக்கப்பட்டுள்ள ஆன்மீகத் தாழ்ச்சி என்ற கருப்பொருள், முக்கியமாக, இயேசுவின் சொந்தப் போதனையிலும் வாழ்க்கை முறையிலும் இடம்பெற்றுள்ளது. அது அனைத்து வகையான மகத்துவத்தையும் தீவிரமாகத் தவிர்க்கிறது. சிலுவையில் அவருடைய மீட்பின் தியாகத்திற்கு வழிவகுக்கும் நமது இறைவனின் தாழ்மையான வாழ்க்கை நெறிமுறை, சில சமயங்களில் கிரேக்க வார்த்தையான கெனோசிஸ் வழியாக கிறிஸ்தவ பாரம்பரியத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் (2:7) அடிமையின் வடிவவை எடுத்துத் தன்னையேத் தாழ்த்திய இறைவனின் திருமகனைக் கவிதையால் புகழ்ந்துள்ளார். இறையரசில் வாழ விரும்புவோரின் முக்கிய மதிப்பாக ஆன்மீகத் தாழ்ச்சி அடையாளம் காணப்படுகிறது. ‘தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கு வந்தார்’ (மத். 20:28) என்ற தலைவரின் அதே தாழ்மையான, தன்னையே வழங்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும்போது, கிறிஸ்தவர்கள் இறைவனைப் பின்பற்றுகிறார்கள்.

கெனோசிஸ் வழியிலான ஆன்மீகப்படி வாழ்வது அவ்வளவு எளிதல்ல. இன்று அதைக் கடைப்பிடிப்பது இன்னும் கடினமாக இருக்கிறதா? வாழ்வில் முன்னேறிச் செல்ல முதலில் நம்மை நாமே கவனித்துக்கொள்ள வேண்டும் என்பது இன்றைய நடைமுறையல்லவா? இன்றைய உலகில் நாம் உண்மையிலேயே பிறருக்காகத் தியாகம் செய்ய முடியுமா? அல்லது உயிர்வாழ்வதற்கான நமது உள்ளுணர்வு, ‘அனைவருக்கும் எதிரான அனைவரின் போர்’ என்று தத்துவ ஞானி தாமஸ் ஹோப்ஸ் கூறுவது போல, நம்மை மற்றவர்களுக்கு எதிராகத் திருப்புமா?

சுயநலப் பாதுகாப்புக்கான உள்ளுணர்வு நமது மனித இயல்பின் அவசியமான பகுதியாகும். இது நம்மைச் சுற்றியுள்ளச் சூழலைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஆபத்தைத் தவிர்க்கவும் உதவுகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், வயது வந்தவரின் சவாலானச் சூழலைத் தக்க வைக்கவும் பயிற்சி அளிக்கிறார்கள். சுயம் என்பது நம் தந்தையான இறைவன் நமக்களித்தக் கொடை. அது மரியாதைக்கு தகுதியானது, அதை நாம் வளர்ப்பது மிக அவசியம். சுயநல அக்கறை மற்றவர்களைக் கவனிப்பதற்கும் நீட்டிக்கப்படுகிறது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

அடுத்தப் பக்கத்தில் தொடரும் ...

முன் பக்கத்தின் தொடர்ச்சி ...

## தியானிப்போம்

வாழ்வில் வெற்றி பெற நம் சமூகம் சுய~கவனிப்பை வலியுறுத்துகிறது, ஆரோக்கியத்திற்கான உயர் தரமான சுயமரியாதையை இலட்சியமாக்குகிறது. இருப்பினும், சுய~கவனிப்பு மற்றும் சுய~நுகர்தல் ஆகியவற்றுக்கு இடையே ஒரு சிறு கோடு உள்ளது. தொழில்களும் தொழில்நுட்பக் கலாச்சாரங்களும், உங்களை ஒரு மனிதனாக நிலைப்படுத்த, நீங்கள் மட்டுமே தீர்மானிக்க வேண்டும் என்ற எண்ணத்தை இயல்பாக்கி, முழு மனித ஆற்றலுக்கானப் பாதை இடைவிடா நுகர்தலே என்பதை விதியாக்குகிறது. ஒருவர் நீண்ட ஆயுளையும் இளமைத் துடிப்பையும் பெற எவ்வளவு நேரமும் பணமும் செலவிடப்படுகிறது என்பதைச் சற்று கவனியுங்கள். மற்றவர்கள் நாம் பயன்படுத்தப்பட வேண்டிய பொருள்கள், போட்டியாளர்கள் அல்லது எதிரிகள் என்று எண்ணும் ஒரு 'தகுதிமயமான' சமூகத்தில் நாம் வாழ்கிறோம். எப்போதும் நாம் அவர்களுக்கு மேலானவராக இருக்க வேண்டும். இத்தூண்டுதல்கள் கெனோசிஸ் வழிக்கு முரணானதா?

நாம் எப்போதும் மற்றவர்களைப் பற்றியே எச்சரிக்கையாக இருந்தால், மற்றவர்களுக்காக நம்மைக் கொடுக்க முனைவோமா? கடந்த ஆண்டு ஜூலை மாதம் கொள்கைகள் ஆய்வுக்கானக் கல்வியகம் வெளியிட்ட ஆய்வின்படி, சுமால் 65% சிங்கப்பூரர்கள், மற்றவர்கள் மீது நாம் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும் என்று நம்பினர். மாறாக, 35% பேர் மட்டுமே மற்றவர்களை நம்பலாம் என்று கருத்தளித்தனர். மற்றவர்கள் நம்மைப் பயன்படுத்திக் கொள்ளாதபடி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நம் மக்கள்தொகையில் பெரும்பான்மையோர் தங்களுக்குள்ளே தீர்மானித்து விட்டால், அன்பின் செயல்கள் அனைத்தும் சந்தேகத்துடன் உணரப்படலாம்.

இவ்வாறு, கிறிஸ்தவர்கள் ஒரு முரணானக் கலாச்சாரச் செய்திகளின் மத்தியில் தங்களைக் காண்கிறார்கள்: ஒருபுறம், சமூகம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் மற்றவர்களுக்கு எதிராக வெற்றி பெறவும் நம்மைத் தூண்டுகிறது. மறுபுறம், நம்மையே வெறுமையாக்கும் அளவுக்கு அயலானையும், தகுதியற்றவர்களையும் அன்பு செய்ய வேண்டும் என்று நமது மதம் நமக்குக் கட்டளையிடுகிறது. இயேசு எல்லா மனிதகுலத்திற்காக அல்ல, தனது குடும்பத்தாருக்காகவும் நெருங்கிய நண்பர்களுக்காகவும் மட்டுமே தம் உயிரை அளிக்க இவ்வுலகிற்கு வந்தார் என்பது உண்மையானால், அது நமது உள்ளுணர்வை ஒப்புரவாக்குவதில் ஒரு போராட்டமாக்கும். நாம் வாழ நம் இனத்தை அழித்து வாழும் கடுமையான ஒரு சூழலின் உண்மைகளுடன் கெனோசிஸ் வகையான அன்பை நாம் எவ்வாறு சமநிலைப்படுத்துவது? ஒரே நேரத்தில் நாம் சிங்கப்பூரராகவும் கத்தோலிக்கராகவும் ஒருங்கிணைந்து வாழ முடியுமா?

## சிந்திப்போம்

### பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இறைவார்த்தைப் பகுதியில் எது உங்கள் மனதைத் தொட்டது? கீழுள்ளக் கேள்விகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள். நீங்கள் குழுவாக இருந்தால் இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

தன்னலப் பாதுகாப்பு மற்றும் தன்னலத் தியாகம் ஆகியவற்றுக்கு இடையேயான எல்லையை நான் எங்கு வரைய வேண்டும்? ஒரு சிங்கப்பூரர் என்ற எனது மதச்சார்பற்ற அடையாளத்திற்கும் (வேலை, குடும்பம், குடிமைப் பொறுப்பு போன்றவை), ஒரு கத்தோலிக்கர் என்ற எனது மத அடையாளத்திற்கும் வித்தியாசம் உள்ளதா? உலகில் இருப்பதற்கும், உலகிற்காக இருப்பதற்கும் உள்ள முடிவற்ற எதிர்ப்புகளுக்கு மத்தியில் இறைவார்த்தையை வாழ்வதை ஒரு திருப்பயணமாக நான் பார்க்கிறேனா?

### துணைக் கேள்விகள்:

*உங்கள் குழுவின் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்து, சிறிது நேரம் ஒதுக்கி இதைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

### அன்பியங்களுக்காக:

எனது சொந்த சமூகத்தில் உள்ளவர்களிடையே தன்னலத் தியாகத்தின் எந்த உதாரணங்களை நான் பின்பற்ற முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

இயேசு செய்த அனைத்தும் மற்றவர்களை மீட்கவே. எனது பணிக்குழுவில் நான் அதையே செய்கிறேனா? இறைவனுக்காகவும் மற்றவர்களுக்காகவும் உண்மையாக உழைக்கும் பணியாளர்களிடமிருந்து (துறவறத்தாரும் பொதுமக்களும்) கெனோசிஸின் எந்த உதாரணங்களை நான் பின்பற்ற முடியும்?

### குடும்பங்களுக்காக:

உறவினர்களை விட குடும்பத்தினருக்கே தியாகம் செய்ய மக்கள் தயாராக இருப்பதாக ஒரு அனுமானம் உள்ளது. இதை நான் ஒப்புக்கொள்வேனா? ஏன்? கிறிஸ்துவைப் போல் எனக்காகத் தியாகங்களைச் செய்த என் குடும்பத்தினர்களை நான் அங்கீகரித்து பாராட்டுகிறேனா? இதை வெளிக்காட்ட நான் என்ன செய்தேன்?

## நம் வாழ்விற்காக

இறைவார்த்தையை நாம் ஒரே நாளில் புரிந்து கொள்ள முடியாது.
அது ஒரு நாளுக்கானதல்ல, நம் வாழ்க்கானது. உயிருள்ள வார்த்தை உயிருள்ளவர்களுக்கே.

## நற்செயல் புரிவோம்

நீங்கள் செபித்துக் கொண்டிருக்கும் நபரைச் சந்தித்து அவர்களது சூழ்நிலைகள் மேம்பட்டுள்ளதா அல்லது அப்படியே உள்ளதா எனக் கேட்டறியுங்கள். கவனமாகக் கேட்ட பின், அவரால் என்ன செய்ய முடியும் எனக் கேளுங்கள். உயிர்ப்புப் பெருவிழாவுக்கு அவரை அழையுங்கள். உங்களுக்குள் எந்த வித ஆட்சேபனையும் இல்லையென்றால் திருப்பாடல் 23ஐ (பக்கம் 75) ஒன்றாகச் செபித்து உரையாடலை முடிக்கவும்.

## இறுதி செபம்

எங்கள் தந்தையாகிய இறைவனே,

நிச்சயமற்ற, முரண்பாடற்ற, தன்னலப்~பாதுகாப்பும் பொருளியல்வாதமும் உள்ள இக்காலக்கட்டத்தில் நாங்கள் பயணிக்கும்போது, உமது வார்த்தை மட்டுமே எங்களுக்கு உயிரளிக்கிறது. உமது அன்புத் திருமகனான இயேசு கிறிஸ்து, இவ்வுலகம் தரக்கூடிய செல்வமும், புகழும், அதிகாரமும் உள்ள வாழ்வை விட அதிகம் உம்மிடம் உள்ளது என்பதை எங்களுக்குக் காட்டத் துன்புறும் ஊழிய அரசராக தனது மாட்சியைத் துறந்து, தன்னையே வெறுமையாக்கினார். எங்களின் இந்தத் திருப்பயணம், உயிரளிக்கும் உமது வார்த்தையை நோக்கி இருப்பதாக. இந்தத் தவக்காலம் வெகு விரைவில் முடிவுக்கு வருவதால், உமது உயிருள்ள வார்த்தைக்கான எங்கள் திருப்பயணம், மனிதகுலம் மீதுள்ள உமது அன்பையும் அக்கறையையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதாக. உம் சொந்தத் திருமகனாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தை மற்றவர்கள் எங்கள் முகங்களில் காணச் செய்தருளும்.

ஆமென்.

# வாழும் வார்த்தைக்குள் ஒரு திருப்பயணம்



# நாங்கள் எதை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்?

இந்தக் கையேட்டைப் பயன்படுத்தியமைக்கு நன்றி! நீங்களும் உங்கள் சமூகமும் இறை நம்பிக்கையில் வளர இச்சிந்தனைகள் உதவியிருக்கும் என நம்புகிறோம். இந்தக் கையேடு உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ததா? எதிர்காலக் கையேடுகளில் வேறு என்னென்ன எதிர்பார்கிறீர்கள்? உங்கள் கருத்து எங்களுக்கு முக்கியமானது. அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்!

Scan me

**one.org.sg/feedback**

# தவக்கால நடவடிக்கைகள்

## குடும்பங்களுக்கானச் சிந்தனைகள்

தவக்காலம் என்பது உயிர்ப்புப் பெருவிழாவுக்குத் தயாராகும் காலம். தம் மக்களை இருளிலிருந்து ஒளிக்குக் கொண்டுவரும் நம் தந்தையாகிய இறைவனின் மீட்புத் திட்டத்தையும், பரிசுத்தத்திற்கான அவரது அழைப்பிற்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டிய நேரமிது. இத்தவக்காலம் திருநீற்றுப் புதன் அன்று தொடங்கி புனித சனி வரை நீடிக்கும். செபம், தவம், நோன்பு, தானம் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் விசுவாசிகளாகிய நாம், 2000 ஆண்டுகளுக்கு முன்பு பாலை வனத்தில் 40 நாட்கள் கழித்த நம் இறைவனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, 40 நாள் பயணத்தை மேற்கொள்கிறோம்.

## குடும்ப நடவடிக்கை 1 - சிலுவைப்பாதை

இந்தக் குடும்பச் சிலுவைப்பாதை ஒரு எளிய அமைதியான செப நேரமாகவோ, ஒவ்வொரு நிலையிலும் தியானித்துச் சிந்திக்க ஒரு வாய்ப்பாகவோ இருக்கலாம். இதை நீங்கள் தொடங்குவதற்கு முன், இந்தக் குறிப்புகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்:

- இந்தக் குடும்பச் சிலுவைப்பாதையைச் செபிக்க உங்கள் பங்கிலுள்ள நிலைகளையோ, வேறு தகுந்த ஓவியங்களையோ படங்களையோ (ஒவ்வொரு வாரமும் வித்தியாசமான ஒன்றை) பயன்படுத்தலாம். வழிபாட்டுக் கலை மூலமாக உங்கள் குடும்பம் கடவுளை அனுபவிக்க நல்லதொரு வாய்ப்பு.
- இந்தக் குடும்பச் சிலுவைப்பாதை ஒரு செபம் என உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் நினைவூட்டுங்கள். இயேசுவின் பாடுகள், இறப்பு, உயர்ப்பு ஆகியவற்றின் மறைபொருளை ஆழமாகப் புரிய இது மிகவும் உதவும்.
- நீங்கள் ஒரே நேரத்தில் அனைத்து நிலைகளையோ, சிலவற்றையோ அல்லது ஒன்றை மட்டுமோ தியானிக்கத் தீர்மானிக்கலாம்.
- நீங்கள் ஒரு நிலையைத் தொடங்கும் போது அதற்குரிய படத்தை சில நிமிடங்கள் உற்று நோக்குங்கள். பின்னர், அந்த நிலையின் பொருள், அது எவ்வாறு உங்கள் மனதைத் தொட்டது, இங்கு இயேசு உங்களுக்கு என்ன சொல்கிறார், இதிலுள்ள மக்களுடன் உங்களைத் தொடர்பு படுத்த முடியுமா, நீங்கள் இதற்காக நன்றி செலுத்த முடியுமா எனவும் சிந்தித்துச் செபியுங்கள்.

## தேவையானவை

- எல்லா நிலைகளுக்குரிய படங்கள்
- முதல் 12 நிலைகளுக்கு மெழுகுவர்த்திகள்
- மெழுகுவர்த்தி அணைப்பான்
- தீப்பெட்டி
- இருட்டு அறை ~ செபம் படிக்க ஏதாவது ஒரு விளக்கு

## தவக்கால நடவடிக்கைகள்

# சிலுவைப்பாதை

### தொடக்கச் செபம்

ஆண்டவராகிய இயேசுவே,

நீர் எங்களை அதிகமாக அன்பு செய்வதால்,
எங்களைப் புனிதமாக்க உம்மையே சிலுவையில்
முழுமையாக ஒப்புக்கொடுத்தீர். எங்கள் விண்ணகத் தந்தை
முழுமையாய் இருப்பது போல நாங்களும் முழுமையாய்
இருக்க விரும்புகிறோம். இந்தச் சிலுவைப்பாதையைத்
தியானிக்கும் எங்களைப் புனிதமாக்கியருளும். நாங்கள் ஒரே
குடும்பமாக விசுவாசத்துடன் ஒன்றித்து நடக்க உதவியருளும்.

ஆமென்.



# சிலுவைப்பாதை

*முதல் 12 நிலைகளுக்காக மெழுகுவர்த்திகளுக்கு ஒளியூட்டுங்கள்*

## ஒவ்வொரு நிலையைத் தொடங்கும் முன்:

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## முதல் நிலை:
## இயேசு சாவுக்குத் தீர்ப்பிடப்படுகிறார்

தீர்ப்புக்காகப் பிலாத்துவின் முன் இயேசு, தலைமைக் குருக்களாலும் மூப்பராலும் நிறுத்தப் பட்டுள்ளார். அவர் நிரபராதி என்றாலும் அவருக்குத் துணை நிற்க யாருமில்லை. எவ்விதப் பிரச்சனைகளையும் விரும்பாத பிலாத்து தன்னால் ஒன்றும் செய்ய முடியாதக் காரணத்தால் இயேசுவை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கிறான்.

## இயேசுவைப் பார்:

உங்களைப் பற்றி யாராவது தவறாகப் புண்படுத்தும்படிப் பேசியதுண்டா? உங்களைப் பற்றி யாராவது அபாண்டமாகப் பொய் சொல்லியதுண்டா? அப்படி யாராவது செய்திருந்தால், அந்த நேரத்தில் உங்கள் உள்ளம் எப்படி இருந்ததென உணர்ந்தீர்களா? நீங்கள் மிகவும் பயந்திருக்கலாம், காயப்பட்டிருக்கலாம் அல்லது கோபப்பட்டிருக்கலாம்.

அப்படிப்பட்ட இதயத்தை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள். மேலும், நம் தந்தையாகிய இறைவன் என்றும் நம்மோடு இருப்பதை நமக்கு நினைவூட்டும்படி இயேசுவிடம் சொல்லுங்கள்.

*முதல் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## இரண்டாம் நிலை:
## இயேசு சிலுவை சுமந்து செல்கிறார்

படைவீரர்கள் இயேசுவைச் சாட்டையால் அடித்து, துன்புறுத்தி, காறித் துப்பி ஏளனம் செய்த பின், அவர் மேல் பாரமானச் சிலுவையைச் சுமத்தி, நகரத்திலிருந்து கல்வாரியின் கொல்கொதா மலை நோக்கி நடத்திச் சென்றனர்.

### இயேசுவைப் பார்:

நீங்கள் எப்போதாவது கடினமான செயலைகளைச் செய்ததுண்டா? உங்களை யாராவது எப்போதாவது, குறிப்பாக நீங்கள் நோயுற்ற போது, சரியாக நடத்தவில்லையா? சில வேளைகளில் நாம் விரும்புவது போல நம்மைச் சிலர் நடத்துவதில்லை.

அப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் இதயத்தை உற்று நோக்குங்கள். உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

*2ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

## மூன்றாம் நிலை:
## இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

சிலுவையின் பாரச் சுமையால் வலுவிழந்த இயேசு முதல் முறை கீழே விழுகிறார். சிலுவை அவர் தோள்களை அழுத்த, சாலையின் கற்கள் அவரது கால்களை காயப்படுத்துகின்றன. மக்கள் கூட்டம் கூச்சலிட்டு அவரைத் தள்ள, படைவீரர்கள் அவரை வேகமாக முன்னோக்கி நகர்த்துகின்றனர். இயேசு மிகவும் சோர்வாக இருக்கிறார்!

### இயேசுவைப் பார்:

விழுந்தால் வலிக்கத்தானே செய்யும். மக்கள் தவறு செய்வது விழுவதற்குச் சமம். அந்த நேரத்தில் நம் இதயமும் அந்த வலியை உணர்கிறது. நீங்கள் எப்போதாவது விழுந்ததுண்டா? உங்கள் இதயம் வலித்ததுண்டா?

அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

*3ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## நான்காம் நிலை:
## இயேசு தன் தாயை சந்திக்கிறார்

கோபமான கூட்டத்தின் நடுவில், அவர் அங்கு இருக்கிறார். இயேசு தன் தாயைப் பார்க்கிறார். தாயும் சேயும் அவரவர் வலியை உணர்ந்து கொண்டனர். அந்த வலியைப் போக்க அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் இருவரும் தங்களைத்தானே ஆறுதல் படுத்திக்கொள்கின்றனர்.

### இயேசுவைப் பார்:

நீங்கள் வருந்தி அழுத நேரத்தை நினைவு கூறுங்கள். அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

*4ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

## ஐந்தாம் நிலை:
## இயேசுவின் சிலுவையை சுமக்க சீரேனே ஊர் சீமோன் உதவுகிறார்

கல்வாரிக்குச் செல்லும் வழியில், இயேசுவின் சிலுவையைச் சுமக்கப் படைவீரர்கள் சீரேனே ஊரைச் சார்ந்த சீமோனை இழுத்து வந்தனர். அவர் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார். பின் இருவரும் சேர்ந்து சிலுவையைச் சுமந்தபடி வெகுதூரம் நடந்து சென்றனர்.

### இயேசுவைப் பார்:

உதவி செய்வதென்றால் கடினமாகத்தான் இருக்கும். அந்த நேரம் நாம் எதையாவது விரும்பிச் செய்து கொண்டிருக்கலாம், அல்லது அந்த நபருக்கு உதவி செய்ய விரும்பம் இல்லாமல் இருக்கலாம். உங்களின் உதவி நாடி வந்தவருக்கு உதவி செய்யமால் இருந்த நேரத்தை சற்று எண்ணிப் பாருங்கள்.

அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். 'உன் உதவிக்காக நன்றி' என்று இயேசு கூறுவது உங்கள் காதுகளில் ஒலிக்கலாம். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

*5ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## ஆறாம் நிலை:
### இயேசுவின் முகத்தை வெரோனிக்கா துடைக்கிறார்

வெப்ப மிகுதியால் இயேசு சோர்வுற்றுத் தளர, அவரது முகத்தில் வியர்வையும் இரத்தக் கறையும் தூசியும் படர்ந்துள்ளது. அவர்மீது இரக்கம் கொண்ட வெரோனிக்கா என்ற பெண் ஒருத்தி கூட்டத்திலிருந்து வந்து அவரது முகத்தை ஒரு துணியால் துடைக்கிறார்.

**இயேசுவைப் பார்:**

சில வேளைகளில் நீங்கள் செய்த உதவி உங்களுக்குச் சிறிதாகத் தோன்றலாம். தாகத்தில் உள்ளவருக்கு தண்ணீர் கொடுத்தது, வயதானோருக்கு பை சுமந்தது, வருத்தத்தில் உள்ள ஒருவரைப் பார்த்து ஆறுதல் சொன்னது.

நீங்கள் உதவி செய்த போது இருந்த உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். அவர் தன் முகத்தை உங்கள் இதயத்தில் பரிசாகப் பதித்திருப்பதைப் பாருங்கள். இப்போது உங்கள் இதயம் எவ்வளவு அழகாக உள்ளது!

*6ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

## ஏழாம் நிலை:
### இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

இரண்டாவது முறையாக இயேசு கீழே விழுகிறார். சிலுவையின் பாரம் அதிகரிக்கிறது. கூட்டத்திலிருந்தும் படைவீரர்களிடமிருந்தும் வரும் கூச்சல் அவரது நிலையை மோசமாக்குகிறது. எழுந்திருக்கக் கடினமாக இருந்தாலும் இயேசு எழுந்து செல்கிறார்.

**இயேசுவைப் பார்:**

ஏதாவது செயல் உங்களுக்குக் கடினமாக இருந்ததுண்டா? ஏதாவது செயலை மீண்டும் மீண்டும் சொதப்பியதுண்டா? எவ்வளவு முயற்சி செய்தும் அச்செயலில் முன்னேற்றம் எதுவும் காண முடியவில்லையா? அப்போது உங்கள் இதயத்தின் நிலை என்ன?

அந்த நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இரண்டாம் முறை விழுந்தபோது இயேசுவின் நிலையும் இப்படித்தான் இருந்திருக்கும். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். உங்கள் இதயத்தின் நிலையை அவர் அறிவார்.

*7ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## எட்டாம் நிலை:
## இயேசு எருசலேம் மகளிரைச் சந்திக்கிறார்

இயேசுவைப் பின்பற்றி வந்தவர்களுள் சில பெண்கள் மாரடித்துக் கொண்டும், அவருக்காக அழுது கொண்டும் இருந்தனர். அவர் அவர்களைப் பார்த்து 'எருசலேம் மகளிரே, எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்' என்று ஆறுதல்படுத்தி, மற்றவர்களையும் கவனித்துக் கொள்ளும்படிச் சொல்கிறார்.

### இயேசுவைப் பார்:

பல வேளைகளில் நாம் நம்மைப் பற்றியும், நம் பிரச்சனைகள் பற்றியும் அழுது புலம்புகிறோம். பிறரையும் பிறரது பிரச்சனைகள் பற்றியும் நாம் கவலைப்படுவதில்லை. நீங்கள் உங்களைப் பற்றி மட்டுமே நினைக்கும் போது உங்கள் இதயத்தின் நிலை என்ன?

அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள். பிறரைப் பற்றி மட்டுமே நினைக்கும் இதயம். அதுவே இயேசுவின் இதயம்.

*8ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

## ஒன்பதாம் நிலை:
## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

பயணம் மிக நீண்டதாகவும் கடினமானதாகவும் தெரிகிறது. மறுபடியும், மூன்றாம் முறையாக, இயேசு தரையில் விழுகிறார். எனினும், மிகுந்த தைரியத்தோடும் சகிப்புத் தன்மையோடும் இயேசு கல்வாரி நோக்கிச் செல்கிறார். நம்மீது அவர் வைத்திருக்கும் அன்பு அந்த வேதனைகளை எல்லாம் தாங்கிக் கொள்கிறது.

### இயேசுவைப் பார்:

கடினமாக இருந்தாலும் இயேசு மீண்டும் எழுந்தார். உண்மையில் நாம் ஒரு செயலைச் சிறப்புடன் செய்யப் பல முறை முயன்றும், வெற்றி பெற முடியாமல் போகும்போது நாம் மனந்தளர்ந்து விடுகிறோம். சில நேரங்களில் மற்றவரின் கோபத்துக்கோ நகைப்புக்கோ ஏளனத்துக்கோ பயந்து நாம் செய்யும் செயலைக் கைவிட்டுவிடுகிறோம்.

இவ்வாறு பிறரின் கோபத்துக்கோ நகைப்புக்கோ ஏளனத்துக்கோ பயந்து எதையாவது செய்யாமல் மனந்தளரந்து போனதுண்டா? அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, இயேசுவின் உதவிக்காக அவரிடம் மன்றாடுங்கள்.

*9ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## பத்தாம் நிலை:
## இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

படைவீரர்கள் இயேசுவின் ஆடைகளை நான்கு பாகங்களாகத் தங்களுக்குள் பிரித்துக் கொள்கிறார்கள். பின் அவரது அங்கியை எடுத்து, அது கீழிருந்து மேலாகத் தையலின்றி ஒரே துண்டாக இருந்ததால் ஒருவரையொருவர் நோக்கி, 'அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்கு என்று பார்க்கச் சீட்டுப் போடுவோம்' என்றனர். தன் உடலை மறைக்க ஒரு சிறு துணியுடன் இயேசு கூட்டத்தின் முன் நிற்கிறார்.

### இயேசுவைப் பார்:

உங்களுக்குப் பிடித்த ஒன்றை மற்றவருக்குக் கொடுக்கக் கடினமாக உள்ளதா? சில நேரங்களில் எல்லாவற்றையும் உங்களுக்கே வைத்துக் கொள்வீர்களா? உங்களுக்கு சொந்தமான ஒன்று, உங்களுக்கும் மற்றவருக்கும் இடையே பிரச்சனையை உண்டாக்க நீங்கள் அனுமதிப்பீர்களா?

இது போன்ற பிரச்சனைகள் வந்த நேரத்தை நினைவு கூறுங்கள். அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். பின், உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

*10ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

## பதினோறாம் நிலை:
## இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்

இயேசுவை அவர்கள் சிலுவையில் அறைந்தபோது காலை ஒன்பது மணி. 'யூதரின் அரசன்' என்ற குற்றப்பத்திரிக்கை சிலுவையின் மேலிருந்தது. அவருடன் இரு கள்வர்களை, ஒருவன் வலப்பக்கமும் மற்றவன் இடப்பக்கமுமாக சிலுவையில் அறைந்தார்கள். பலர் அவரைக் கடந்து சென்றனர். சிலர் அவரைப் பரிகசித்து ஏளனம் செய்தனர். படைவீரர்கள் அவரைச் சிலுவையில் ஆணியால் அறைந்தபோது அவர் எவ்வளவு கொடிய வேதனையை அனுபவித்திருப்பார்! ஆயினும் தம்மைத் துன்புறுத்தியவர்களை மன்னிக்கும்படி கடவுளிடம் அவர்களுக்காக வேண்டுகிறார்.

### இயேசுவைப் பார்:

உங்களை ஒருவர் வார்த்தையாலோ செயலாலோ துன்புறுத்தியதுண்டா? அவர்களை மன்னிக்க உங்களுக்குக் கடினமாக இருந்ததா? மன்னிப்பது கடினம் என இயேசுவுக்கு நன்றாகவேத் தெரியும். எனவே, நீங்கள் அவரிடம் மன்றாடும் போது அவர் உங்கள் மனதை மாற்றி, அவர்களை மன்னிக்க இயேசு கற்றுத் தருவார். இயேசு வழியாக நீங்கள் இப்படிச் செய்த பின் உங்கள் இதயம் எப்படிப்பட்டதாக இருக்கும் என சற்று எண்ணிப் பாருங்கள்.

*11ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள்.*

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## பன்னிரெண்டாம் நிலை:
## இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

இப்போது மதியம். பகல் மூன்று மணி வரை சூரியன் மறைய, இருள் பூமி முழுவதையும் சூழ்ந்து கொண்டது. கோவிலின் திரை இரண்டாகக் கிழிந்தது. அப்பொழுது, இயேசு: 'தந்தையே, உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்' என்று பலத்த குரல் எழுப்பி தன் ஆவியைத் தந்தையிடம் கையளிக்கிறார்.

*சிறிது நேரம் மௌனமாக செபிக்கவும்.*

### இயேசுவைப் பார்:
நீங்கள் எதையாவது சிறப்பாகச் செய்ய நினைத்து, இன்னும் சிறிது முயன்றிருந்தால் நீங்கள் விரும்பிய மாற்றத்தை செய்திருக்கலாம் என நினைத்ததுண்டா? ஒரு செயலைச் செய்ய உங்களது கடின முயற்சி இல்லாததால் ஏதேனும் தவறு ஏற்பட்டதுண்டா?

அப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இயேசு உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும் போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

*12ம் நிலைக்குரிய மெழுகுவர்த்தியை அணையுங்கள். இப்போது உங்கள் அறை இருண்டு இருக்க வேண்டும்.*

## பதிமூன்றாம் நிலை:
## இயேசுவின் உடலைச் சிலுவையிலிருந்து இறக்குகிறார்கள்

அரிமத்தியாவின் யோசேப்பு இயேசுவின் உடலை எடுத்து அடக்கம் செய்ய பிலாத்துவிடம் அனுமதி கேட்கிறார். பிலாத்து அவருக்கு அனுமதி கொடுக்க, அவர் சிலுவையிலிருந்து அவரது உடலை இறக்குகிறார். அன்னை மரியா உயிரற்ற தன் மகன் இயேசுவின் உடலைத் தன் மடியில் வைத்து, 'உன் ஆன்மாவை ஒரு வாள் ஊடுருவும்' என்ற சீமோனின் வார்த்தைகளை எண்ணிப் பார்க்கிறார்.

### இயேசுவைப் பார்:
நீங்கள் அன்பு செய்த ஒருவர் இறந்ததுண்டா? அவரைப் பற்றி நினைக்கையில் உங்கள் இதயம் எப்படி இருக்கும்? உங்கள் இதயத்தை இயேசுவிடம் காட்டி, இறந்தவரைப் பற்றிய உங்கள் எண்ணங்களை இயேசுவிடம் பகிருங்கள். உங்கள் இதயத்தை இயேசு நன்கு அறிந்திருக்கிறார். உங்கள் இதயத்தை இயேசுவிடம் காட்டும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். உங்கள் இதயத்தை அவருடைய இதயத்தைப் போலக்கா அவரால் மட்டுமே உதவ முடியும்.

# சிலுவைப்பாதை

முத: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
எல்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
*ஒவ்வொரு நிலைக்குப் பின் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவப் புகழ் சொல்ல வேண்டும்.*

## பதிநான்காம் நிலை:
## இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

யோசப்பும் நிக்கோதேமுவும் இயேசுவின் உடலை யூத முறைப்படிச் சுத்தமாகக் கழுவி, நறுமணத் தைலம் பூசி, புதுத் துணியால் போர்த்தி, கல்லறையில் அடக்கம் செய்தனர். பின்னர், யாரும் கல்லறையினுள் நுழையாதபடி அதன் வாயிலில் அவர்கள் ஒரு பெரிய கல் ஒன்றை வைத்தனர்.

## இயேசுவைப் பார்:

நீங்கள் யாருக்காவது மிக வருத்தத்துடன் பிரியாவிடை கொடுத்துண்டா? அது நெடுநாள் பிரிவாகவோ சிறிய பிரிவாகவோ இருக்கலாம். ஒருவேளை அது உங்கள் பிரியமானவரின் இறப்பாகக் கூட இருக்கலாம்.

அப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் இதயத்தின் துக்கமாகப் பிரியாவிடை கொடுத் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இயேசு உங்களை அன்பு செய்வதையும், அவர் உங்களோடு இருப்பதையும், துயரமான உங்கள் இதயத்தினுள் அவர் இருப்பதையும் உருவகப்படுத்திப் பாருங்கள்.

# சிலுவைப்பாதை

## முதல்வர்

கிறிஸ்து இல்லாமல் இவ்வுலகம் இருளில் மூழ்கி விடுகிறது. இயேசு இறந்தபோது, எல்லாம் நம்பிக்கையற்றதாகத் தெரிந்தது. ஆனால், இது முடிவல்ல என்று நமக்குத் தெரியும். இயேசு இறந்த மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று நமக்குத் தெரியும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஒளியானது இறப்பையும் தாண்டி நமக்குப் புத்துயிர் அளிக்கிறது.

## இறுதி செபம்

ஆண்டவராகிய இறைவா,

உயிருள்ள நிலைவாழ்வில் உம்மோடு ஒன்றித்திருக்க,
உமது இறப்பிலும் நாங்கள் ஒன்றித்திருக்கிறோம்.
ஆண்டவரே, பாவ வழிகளிலிருந்து விலகி
உமது தூய வழிகளில் வளர எங்களுக்குக் கற்றுத் தாரும்.

ஆமென்.



குடும்ப நடவடிக்கை 2

# தவக்காலக் குடும்பச் சவால்

## வழிமுறைகள்

- நடுக்கட்டத்தில் தொடங்குங்கள் ~ அதாவது 'சிலுவைப்பாதை செபியுங்கள்' ஒவ்வொரு கட்டத்தின் பணியை முடித்ததும் அதைக் குறியிடுங்கள்.
- விளையாட்டின் நோக்கம் ~ ஒரு முழு வரிசையை முடிக்க (7 கட்டங்கள்) வேண்டும். அந்த வரிசையை கிடைமட்டமாகவோ, செங்குத்தாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். ஒவ்வொரு வரிசையும் செபம், தவம், நோன்பு, தானம் போன்ற பணிகளை உள்ளடக்கியிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.
- சவாலை வெல்வது எப்படி: முழு வரிசையை அடையும் முதல் குடும்ப உறுப்பினராக இருங்கள்!
- இந்தச் சவால் உங்களுக்கு எளிமையாக இருந்தால், தவக்காலத்தின் ஒவ்வொரு வாரமும் ஒரு புது வரிசையை முடிக்க முயற்சி செய்யுங்கள் ~ தினமும் ஒரு கட்டம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒருவருடைய வேலையில் உதவுங்கள் | தொலைகாட்சித் தொடரையும் சினிமாவையும் தவிருங்கள் | இன்று ஆண்டவர் செய்தவைக்காக புகழ் பாடுங்கள் | ஒருவரைக் கட்டித் தழுவுங்கள் | இனிப்புச் சிற்றுண்டியைத் தவிருங்கள் | நண்பர் ஒருவருக்காக செபியுங்கள் | ஒருவருக்கு வாழ்த்து அட்டை செய்யுங்கள் |
| விரைவு உணவைத் தவிருங்கள் | சமூக மறைப் பணிக்காகச் செபியுங்கள் | தேவை உள்ளவருக்கு உதவுங்கள் | சமூக ஊடகங்களைத் தவிருங்கள் | செபமாலை செபியுங்கள் | ஏழை ஒருவருக்குப் பணம் அளியுங்கள் | இனிப்பு பான வகைகளைத் தவிருங்கள் |
| இறை அழைத்தலுக்காக செபியுங்கள் | உங்கள் குடும்பத்திற்கு சமைத்திடுங்கள் | இறைச்சி வகைகளைத் தவிருங்கள் | ஏக்கத்தோடு இருக்கும் ஒருவருக்காகச் செபியுங்கள் | வீட்டின் படுக்கை அறையை சுத்தமாக்குங்கள் | உணவுக்குப் பின்னுள்ள இனிப்புகளைத் தவிருங்கள் | தாழ்ச்சிக்காக செபியுங்கள் |
| ஒருவரை உணவருந்த அழையுங்கள் | தீய பழக்கம் ஒன்றை விட்டு விடுங்கள் | ஒரு தவக்காலப் பாடலைப் பாடுங்கள் | சிலுவைப்பாதை செபியுங்கள் | தொலைகாட்சி, சினிமாவை தவிருங்கள் | நற்கருணை ஆராதனையில் ஈடுபடுங்கள் | பயன்படுத்தாத ஒரு பொருளை தானம் செய்யுங்கள் |
| தினமும் விவிலியத்தைப் படிக்கவும் | நோயுற்ற ஒருவருக்காக செபியுங்கள் | ஒருவரை உணவால் உபசரியுங்கள் | கைப்பேசியில் விளையாடுவதை தவிருங்கள் | பாவசங்கீர்த்தனம் செய்யுங்கள் | சோர்ந்திருக்கும் ஒருவருக்கு ஆறுதல் அளியுங்கள் | கிறிஸ்தவப் பாடல்களைக் கேளுங்கள் |
| உத்தரிக்கும் தல ஆன்மாவுக்காகச் செபியுங்கள் | அன்பான சொற்களால் பேசுங்கள் | கிசுகிசு பேசுவதைத் தவிருங்கள் | தாயகம், இல்லம் செல்ல ஏங்குவோருக்குச் செபியுங்கள் | சுற்றுச் சூழல் வாழ்க்கைமுறை பின்பற்றுங்கள் | பிறரைத் தீர்ப்பிடுவதைத் தவிருங்கள் | ஒரு குருவானவருக்கு செபியுங்கள் |
| நல்ல பழக்கம் ஒன்றை ஏற்றுக் கொள்ளுங்கள் | தேவையானதை மட்டும் வாங்குங்கள் | திருமுழுக்கு பெறுவோருக்காக செபியுங்கள் | ஒருவரை உறுதிப் படுத்துங்கள் | ஆரோக்கியமான ஒன்றை முயற்சியுங்கள் | வாரநாள் திருப்பலிக்குச் செல்லுங்கள் | ஒரு புதிய புனிதரைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள் |

நடவடிக்கைகள்

# குழுச் செயல்பாடுகள்

## நம் சமூகத்தில் உறவுகளை [மீண்டும்] கட்டுதல்:

தவக்காலம் என்றாலே எதையாவது ஒன்றை விடுவதைப் பற்றித்தான் நாம் நினைக்கிறோம். தொலைக்காட்சித் தொடர்களை, இறைச்சி சாப்பிடுவதை, மது அருந்துவதை, சமூக ஊடகத்தை என்று விடுதல் பட்டியல் தொடர்கிறது. இத்தியாகங்கள் நல்லவை என்றாலும், ஏன் இவற்றைச் செய்ய வேண்டுமென நம் இதயத்தையும் எண்ணத்தையும் ஆராய வேண்டும். தவக்காலம் என்பதற்காக இவற்றை செய்கிறோமா? அப்படியென்றால் அது மிக மிகவும் எளிது. வெறும் 40 நாள்களுக்கு மட்டும் விட்டுவிட்டப் பின் அதை மீண்டும் இரண்டு மடங்காகச் செய்வதால் என்ன பயன்? இத்தியாகத்தால் நம்மில் புதுவாழ்வு, புது மனிதன் என்றதொரு மாற்றம் ஏற்பட வேண்டும்.

இந்தத் தவக்காலத்தில் நம் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அருளைத் தருபவர் நம் தந்தையாகிய இறைவன். இந்த மாற்றம் நம் தந்தையாகிய இறைவனையும் மற்றவர்களையும் அதிகமாக அன்பு செய்ய வைக்கிறது. இது, நம் தந்தையாகிய இறைவனோடும் மற்றவர்களோடும் உள்ள நம் உறவுவை மேம்படுத்துகிறது. நம்மிடையே உள்ள உடைந்த உறவுகளைச் சீரமைக்க நல்லதொரு வாய்ப்பை நமக்களிக்கிறது.

நம் சமூகத்தில் பல உறவுகள் முறிந்து போயிருக்கலாம் அல்லது அதிக கவனம் செலுத்தாமல் விடப்பட்டிருக்கலாம். உடைந்த உறவுகள் எல்லாராலும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். நமது அமர்வுகளில் கலந்து கொள்ளாதவர்கள், புதியவர்கள், காணமால் போனவர்கள் எனச் சிலரைக் காணலாம். இப்படிப்பட்ட உறவுகளைக் கண்டு, தைரியமாகச் செயல்பட்டு, நடவடிக்கை எடுத்து மாற்றத்தை ஏற்படுத்த நம் தந்தையாகிய இறைவன் நம்மை அழைக்கிறார். இப்படிப்பட்ட செயல்கள் வெற்றி பெற நாம் நோன்பு இருப்பது மிகவும் பயனளிக்கும்.

உடைந்த உறவுகளைப் புதுப்பிப்பதுடன், புதிய உறவுகளையும் வளர்க்கவும் நம் தந்தையாகிய இறைவன் நம்மை அழைக்கிறார். நம் குழுவை விட்டு விலகியவர்கள் யார்? அவர்களுடன் உறவை உருவாக்க நாம் என்ன செய்யலாம்? என்ன செய்கிறோம்? இன்னும் என்ன அதிகமாகச் செய்யலாம்? நம் தந்தையின் வழிநடத்துதலுக்காக நோன்பிருந்து செபிப்போம்.

உங்கள் அடுத்த ஒப்புரவு வழிபாட்டை நீங்கள் கருத்தில் கொள்ளலாம். இத்தவக்காலத்தில், பிறரை அன்பு செய்ய நம் தந்தையாகிய இறைவன் விரும்புகிறார். பதிலளிப்பது நம் விருப்பம். நாம் எடுக்கும் முதல் படி சிறிதானாலும், நேர்மையுடன் பொறுமையுடன் பிறரை மன்னித்து ஏற்கும் மனப்பான்மையுடன் முன்னோக்கி எடுக்கும் வழிகளை ஆண்டவர் விரும்புகிறார்.

## குழுச் செயல்பாடுகள்

### ஒப்புரவு வழிபாடு:

*(இந்த வழிபாட்டுக்குத் தேவையான பொருட்கள்: காகிதம், எழுதுகோல், காகிதம் சேகரிக்க பெட்டி, கால் கழுவத் தேவையான அகன்ற பாத்திரம், நீர்குவளை, வாளி, துடைக்கத் துணி)*

முதல்வர்: நாம் செய்தவற்றையும், செய்யத் தவறியவற்றையும், தவறுகளையும், காயப்பட்டதையும் நினைவுபடுத்தி, நாமும் நம் தந்தையாகிய இறைவனின் குடும்பம் முழுவதும், கடந்த காலச் சாம்பலிலிருந்து புதுவாழ்வுக்குக் கடந்து செல்ல இறைவனின் வரம் வேண்டி இங்கு கூடியுள்ளோம். இறைவார்த்தைக்குச் செவிகொடுத்து, கடினமானதை ஒப்புக்கொண்டு, உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வோம்.

வாசகம்: திருப்பாடல் **51: 3-17**

வாசகர் **1:**
கடவுளே! உமது பேரன்புகேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்.

வாசகர் **2:**
என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும். என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன். என் பாவம் எப்போதும் என் மனக்கண்முன் நிற்கின்றது.

வாசகர் **3:**
உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன். உம் பார்வையில் தீயது செய்தேன். எனவே, உம் தீர்ப்பினால் உம் நீதியை வெளிப்படுத்தியுள்ளீர். உம் தண்டனைத் தீர்ப்பில் நீர் மாசற்றவராய் விளங்குகின்றீர்.

வாசகர் **4:**
இதோ! தீவினையோடு என் வாழ்வைத் தொடங்கினேன். பாவத்தோடே என் அன்னை என்னைக் கருத்தாங்கினாள். இதோ! நீர் விரும்புவது உள்ளத்து உண்மையையே. மெய் ஞானத்தால் என் மனத்தை நிரப்பும்.

வாசகர் **5:**
ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும். நான் தூய்மையாவேன். என்னைக் கழுவியருளும், உறைபனியிலும் வெண்மையாவேன். மகிழ்வொலியும் களிப்போசையும் நான் கேட்கும்படி செய்யும். நீர் நொறுக்கிய என் எலும்புகள் களிகூர்வனவாக!

வாசகர் **6:**
என் பாவங்களைப் பாராதபடி உம் முகத்தை மறைத்துக் கொள்ளும். என் பாவக் கறைகளை எல்லாம் துடைத்தருளும். கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும்.

வாசகர் **7:**
உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும். உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும். உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும். தன்னார்வ மனம் தந்து என்னைத் தாங்கியருளும்.

வாசகர் **8:**
அப்பொழுது, குற்றம் செய்தோர்க்கு உம் வழிகளைக் கற்பிப்பேன். பாவிகள் உம்மை நோக்கித் திரும்புவர். கடவுளே! எனது மீட்பின் கடவுளே! இரத்தப் பழியினின்று என்னை விடுவித்தருளும். அப்பொழுது, என் நா உமது நீதியை முன்னிட்டுப் பாடும். என் தலைவரே! என் இதழ்களைத் திறந்தருளும் அப்பொழுது, என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும்.

வாசகம்: மத்தேயு **18: 21-22**

வாசகர் **9:**
பின்பு பேதுரு இயேசுவை அணுகி, 'ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா?' எனக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் 'ஏழுமுறை மட்டுமல்ல. எழுபது தடவை ஏழு முறை என நான் உனக்குச் சொல்கிறேன்.' என்றார்.

வாசகம்: **2** கொரிந்தியர் **5: 17-21**

வாசகர் **10:**
எனவே, ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ!

வாசகர் **11:**
இவை யாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார். உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார்.

வாசகர் **12:**
எனவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்.

முதல்வர்:
மேலே படித்த இறைவார்த்தைகளைச் சற்று நேரம் மௌனமாகச் சிந்தித்து, நமக்கு எதற்காக மன்னிப்பு தேவை, நாம் யாரை மன்னிக்க வேண்டும் என தியானிப்போம்.

*(சிறிது நேரம் மௌனமாகச் சிந்திப்போம்)*

முதல்வர்:
நம் தவறுகள், நாம் தனியாக, குடும்பமாக, சமூகமாக, தேசமாக, செய்தவை, செய்யத் தவறியவை போன்றவற்றை ஒரு காகிதத்தில் எழுதவும். இரண்டாவதாக, நான் தனியாக, குடும்பமாக, சமூகமாக, தேசமாக, யாரை எதற்காக மன்னிக்க வேண்டும் என்று இன்னொரு காகிதத்தில் எழுதி இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம்.

*(சிறிது நேரம் மௌனமாகச் சிந்தித்து, இறைவனுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதுவோம்)*

# குழுச் செயல்பாடுகள்

முத: பழையதை விட்டுக்கொடுத்துப் புது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பங்களிக்க இறைவனின் இரக்கத்திற்காக மன்றாடுவோம்.

எல்: எங்கள் பாவங்களை மன்னித்தருளும் ஆண்டவரே. பிறரை மன்னிக்க வல்லமையையும் தைரியத்தையும் தந்து உதவியருளும். புதுப்பிக்கும் ஆவியை என்னுள் உருவாக்கியருளும்.

முத: எழுதிய காகிதங்களை சிறிதாகக் கிழித்து முன் வந்து, அதைப் பெட்டியில் போடுங்கள். பின்னர் அதை நாம் இறைவன் முன்னிலையில் சாட்சியாக எரித்து விடுவோம்.
*(கிழித்த காகிதத் துண்டுகளைப் பங்கேற்பாளர்கள் முன் வந்துப் பெட்டியில் போடவும்)*

முத: தொடர்ச்சியான அன்பையும் சேவையையும் குறிக்கும் வண்ணம் ஒருவர் மற்றவருடைய கால்களைக் கழுவ அன்புடன் வேண்டுகிறேன். இந்தச் செயல் நாம் ஒருவருக்கொருவர் அன்புடன் இணைந்து பணியாற்றுவதைக் குறிக்கிறது.
*(மெதுவான இன்னிசை பின்னணியில் ஒலிக்கஒவ்வொருவரும் இன்னொருவரின் கால்களைக் கழுவ வேண்டும்)*

முத: புதுவாழ்வை வாக்களித்த நம் கடவுளுக்கு நாம் நன்றி கூறுவோம்.

எல்: வாழ்வளிக்கும் வள்ளலே, இந்தப் புதுப்பித்தலுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது மன்னிக்கும் வழியில் நடந்து புதுவாழ்வைக் கொண்டாடும் அனைவருடன் நாங்களும் இணைந்து செயல்படுவோமாக.

முத: நமக்கும் நம் சகோதர சகோதரிகளுக்கும் நம்பிக்கை அளிப்பவரை நோக்கி நம் கண்களை ஏறெடுப்போம். சமூகத்திலுள்ள அனைவருக்கும் நம் இதயங்களைத் திறந்து, நமது நோக்கங்களும் செயல்களும் நீதியும் அமைதியும் கொண்ட இறை அரசை உருவாக்க நாம் உதவுவோம். ஆமென்.
*(Adapted from Education for Justice session on reconciliation)*

# குழுச்
# செயல்பாடுகள்

**இந்தத் தவக்காலத்தில் நீங்கள் ஆலயப் பணிக்குழுவாகவோ சமூகமாகவோ இணைந்து செய்யக்கூடிய ஏழு செயல்கள்:**

1. உணவு வங்க (https://foodbank.sg/) அல்லது வில்லிங் ஹார்ட்ஸ் நிறுவனத்திற்கு (https://willinghearts.org.sg/) ஒரு குழுவாகச் சென்று தன்னார்வத் தொண்டு செய்யுங்கள்.

2. ஆலயப் பணிக்குழுவாகவோ சமூகமாகவோ இணைந்து செப நடை செய்யுங்கள்.

3. தனித்திருக்கும் ஒருவரை மனதில் நினைத்து, புனித வாரத்தில் அவருடன் உணவருந்த உங்கள் நண்பர் சிலருடன் செல்லுங்கள்.


4. புனித வாரத்தில் ஆலயப் பணிக்குழுவாக இணைந்து, உங்கள் பங்கு ஆலயத்தைச் சுத்தம் செய்யவோ, குருத்தோலைகளைத் தயார்படுத்தவோ உதவுங்கள்.

5. இணையச் செயலிகள் வழியாக தினமும் இறைவார்த்தையை வாசிக்கவும், தியானிக்கவும், சிந்திக்கவும் ஒரு குழுவாக முயற்சி எடுங்கள்.

6. கைப்பேசி அரட்டைகள் வழியாக தவக்காலச் செயல்பாடுகளில் ஈடுபட உங்கள் நண்பர்கள் வட்டாரத்தை ஊக்குவியுங்கள்.

7. இந்த இணையப் பக்கத்திலுள்ளப் பங்குகளுக்காகவும், நமது கத்தோலிக்க அமைப்புகளுக்காகவும் நிறுவனங்களுக்காகவும் நிதி திரட்டுங்கள். (https://www.catholic.sg/offertory-organisations/).

# திருப்பாடல் 23
## தெய்வீக நல்லாயன்



ஆண்டவரே என் ஆயர்,
எனக்கேதும் குறையில்லை.
பசும்புல் வெளி மீது எனை அவர்
இளைப்பாறச் செய்வார். அமைதியான
நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்.
அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்.
தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார்.
மேலும், சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில்
நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு
இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்.
உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்
என்னுடைய எதிரிகளின் கண் முன்னே
எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்.
என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்.
எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது.
உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம்
உம் அருள் நலமும் பேரன்பும்
என்னைப் புடைசூழ்ந்து வரும்.
நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.

# நன்றியறிவிப்புகள்

**ஆசிரியர் குழு:**
ஆக்னெஸ் ஙெள
ஆர்தர் கோ
கசில்டா லிம்
கிறிஸ்டோ:ஃபர் கூ
டே:ஃப்னி லியோங்
ஜோயி டான்
லேனார்டு கோ
மோனிக்கா கூ
ஷீலா :ஃபோங்
அருட்தந்தை ஜான் டெரிக் யப்
அருட்தந்தை ஜெரார்ட் லூயிஸ்
அருட்தந்தை டெரென்ஸ் பெரெய்ரா

**மொழிபெயர்ப்பு:**
சீன மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACAMS)
தமிழ் மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACTS)

**வடிவமைப்பு:**
மேபில் ஹியு

ONE

OFFICE FOR THE NEW EVANGELISATION


2 Highland Road #02-19 S(549102)

6911 0420

one.org.sg

enquiries.one@catholic.org.sg

@officeforthenewevangelisation

Office for the New Evangelisation

@evangelise.sg